
வானவில்

VAANAVIL

இதழ் 165 புரட்டாதி 2024

ISSUE 165 September 2024

# புதிய ஜனாதிபதியின் முன்னுள்ள சவால்கள்!




இலங்கையில் 2024 செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் “ஜே.வி.பி.” என சுருக்கமாக அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணியினதும், அக்கட்சியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி என்ற முன்னணியினதும் தலைவராக இருக்கும் அனுர குமார திசாநாயக்க வெற்றி பெற்று, நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ளார்.

இலங்கை அரசியல் அமைப்பின்படி, 50 சத வீதத்துக்கு மேல் வாக்குகள் பெறும் ஒருவரே ஜனாதிபதியாக வர முடியும். அந்த தொகையை திசாநாயக்கவால் எட்ட முடியவில்லை. எனவே, விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு, அதன் பின்னரும் 42.31 வீத வாக்குகள் மட்டுமே பெற்ற நிலையில், திசாநாயக்க இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறார்.

திசாநாயக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற கையோடு பாராளுமன்றத்தைக் கலைத்து, இவ்வருடம் நொவம்பர் 14ஆம் திகதி புதிதாக பொதுத் தேர்தலை நடத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார். அவர் அவ்வாறு செய்ததிற்கு காரணம், கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் அவருடைய ஜே.வி.பி. கட்சிக்கு மூன்று உறுப்பினர்கள் மட்டுமே இருந்தார்கள். ஆனால் 225 உறுப்பினர்கள் கொண்ட இலங்கை பாராளுமன்றத்தில் ஒரு கட்சி ஆட்சி அமைப்பதானால் குறைந்தபட்சம் 113 உறுப்பினர்கள் தேவை. எனவே, புதிதாக தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலம் தனது கட்சி அந்த தொகையை அடைய முடியும் என்ற எதிர்பார்ப்பில் திசாநாயக்க பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

ஜே.வி.பி. கட்சி, இலங்கை மக்களின் பிரச்சினைகள் தீர வேண்டுமென்றால், அமைப்புமுறை மாற வேண்டும் (System Change) என, தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. அந்த நோக்கத்துடன் 1971 மற்றும் 1988–89 காலகட்டத்தில் அந்த இயக்கம் இரண்டு முறை ஆயுதக் கிளர்ச்சிகளை நடத்தியுமுள்ளது. ஆனால் இரண்டு கிளர்ச்சிகளும் ஆளும் வர்க்கத்தால் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டு தோல்வியுற்றன. அதன் பின்னரே அந்தக் கட்சி முழுமையான முதலாளித்துவ பாராளுமன்ற கட்சியாக மாறியது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், இலங்கையில் நடைமுறையில் இருக்கும் முதலாளித்துவ அமைப்பு முறையின் கீழ் உள்ள தேர்தலில் போட்டியிட்டே ஜே.வி.பி. தலைவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனவே, அவரது கட்சி பேசி வந்த ‘அமைப்பு மாற்றம்’ என்பதை அவரால் ஏற்படுத்துவது சாத்தியமில்லை. ஏனெனில், அவரிடம் ஒரு நவ காலனித்துவ அரசமைப்பு முறையே கையளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்பொன்றின் கீழ் அவரால் சில சீர்திருத்த நடவடிக்கைகளையே மேற்கொள்ள முடியும்.

அந்த வகையில் பார்க்கையில், இலங்கையின் இரண்டு பிரதான பிரச்சினைகளான பொருளாதார நெருக்கடி மற்றும் தேசிய இனப்பிரச்சினை என்பனவற்றுக்கு எப்படி அவர் வெற்றிகரமாக தீர்வுகாணப் போகிறார் என்பதிலேயே திசாநாயக்கவினதும், அவரது ஜே.வி.பி. கட்சியினதும் எதிர்காலம் தங்கியுள்ளது.

முதலாவது பிரச்சினையான பொருளாதாரப் பிரச்சினையை எடுத்துக்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# எதிர்பார்ப்புகள் அதிகம்... நிறைவேற்றப்படுமா?

செப்டம்பர் மாதம் 21ம் திகதி நடைபெற்ற இலங்கையின் 9வது ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 55 வயதான அனுரகுமாரா திஸாநாயக்க வெற்றி பெற்று, 23ம் திகதி ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளார். அதனைத் தொடர்ந்து 24ம் திகதி தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரிணி அமரசூரிய புதிய பிரதமராகவும் விஜித ஹேரத் அமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர். (225 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி வெறும் 3 ஆசனங்களை மாத்திரமே கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது) அதன் பின்னர் உடனடியாகவே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நவம்பர் 14ம் திகதி பாராளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கையில் ஜனாதிபதியாகப் பதவியேற்றவர் சாதாரண கூலித் தொழிலாளியின் மகன், முதலாவது இடதுசாரிக்கட்சித் தலைவர், 2022 ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் நடந்த போராட்டத்தை (அரகலய) முன்னின்று நடத்தியவர் என பல்வேறு புகழாரங்கள் அனுரகுமாரா திஸாநாயக்க குறித்து சொல்லப்படுகின்றன. அத்தோடு நாட்டில் நிலவும் ஊழலை ஒழிப்பார், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவார், சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிய மாட்டார் போன்ற எதிர்பார்ப்புகளும் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கையின் சகல இன மக்களும் நீண்டகாலமாகவே ஒரு மாற்றத்தை வேண்டி நிற்கிறார்கள். ஒவ்வொரு தேர்தலும் முன்னைய தேர்தல்களைக் காட்டிலும் மிகமுக்கியமானதாக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கட்டமைக்கப்படும். மக்களும் அதனை முழுமையாக நம்புவார்கள். ஏராளமான வாக்குறுதிகளும் திட்டங்களும் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படும். ஆனால் கடந்த 76 வருடங்களாகவே அரசியல் கட்சிகள் தாங்கள் பதவிக்கு வந்த பின்னர், கூறிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை காற்றில் பறக்கவிட்டு விடுவார்கள்.

2019 ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டணியின் தீர்மானகரமான பங்காளிக்கட்சி, தற்போதைய ஜனாதிபதி அனுரகுமாரா திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) என்பது தெரிந்ததே. இவர்கள் சிவப்புச் சட்டையணிந்தும் சிவப்புக்கொடியுடனும் ஊர்வலங்கள் போவதால் இவர்களை 'இடதுசாரி'யென பலரும் கருதுகிறார்கள். ஆனால் ஜே.வி.பியின் கடந்தகால நடைமுறைகளை எடுத்துப் பார்த்தால் இவர்களை இடது அணிக்குள் சேர்க்க முடியுமா என்ற ஐயப்பாடு எழுவது தவிர்க்க முடியாதது.

ஜே.வி.பியின் முதலாவது ஆயுதக்கிளர்ச்சி 1971 இல், இலங்கையின் பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் (மாஸ்கோ) லங்கா சமசமாஜக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து அமைத்திருந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிரானதாகவே இருந்தது. 13வது திருத்தச்சட்ட மூலம் மகாணசபை முறைமையை வழங்கிய இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தே, 1988 – 1989 இல் ஜே.வி.பி இரண்டாவது ஆயுதக்கிளர்ச்சியை செய்தார்கள். பின்னர் மாகாணசபை தேர்தல்களில் போட்டியிட்டும் வருகிறார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்பான ஜே.வி.பியின் அரசியல் கொள்கைகளும் இடதுசாரி வகைப்பட்டதல்ல. 1970 களில் மலையக மக்கள் குறித்தும் 1980 களில் வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் ஆயதம் தாங்கிய தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் இவர்களின் கண்ணோட்டம் சிங்கள இனவாத நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. அத்தோடு 25 வருடகால யுத்தத்திற்கு பின்னரும், இலங்கை தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வுபற்றி கருத்துகள் எதுவும் கூறாமலேயே இருக்கின்றனர். காலத்திற்கு காலம் கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் ஜே.வி.பியினர், கடந்த 15 வருடங்களாக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஐ.தே.கவின் கொள்கைகளுக்கு ஆதரவான போக்கையே கடைப்பிடித்து வந்தனர் என்பதையும் கவனத்திலெடுக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வெற்றிக்கு 2022 ஆம் ஆண்டு 'அரகலய'விற்கு பின்னரான எழுச்சிதான் மிக முக்கிய காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது. 'அரகலய' ஆரம்பிக்கப்பட்டது எப்படி? பின்னணியில் இருந்த சக்திகள் எவை? என்பது பற்றி முழுமையான தகவல்கள் தெரியாவிடினும், தே.ம.க அல்லது ஜே.வி.பி 'அரகலய'விற்கு பின்னணியில் இருக்கவில்லை என்பது உறுதியானது. (ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற குமார் குணரத்தினம் தலைமையிலான முன்னிலை சோசலிசக் கட்சி 'அரகலய'இல் பிரதான பாத்திரத்தை வகித்துள்ளனர் என்பது தெரிந்ததே) 'அரகலய'வின் வெற்றியை, முறையாக தே.ம.க அறுவடை செய்துள்ளனர் என்றுதான் கூற வேண்டும்.

மறுசீரமைப்பு, சீர்திருத்தம், சிக்கன நடவடிக்கைகள் என்ற பெயரில் சர்வதேச நாணய நிதியம் கோரும் நிபந்தனைகளால், இலங்கையின் சமூக நலத் திட்டங்கள் முற்றிலும் சிதைந்தும் விலைவாசிகள் உயர்ந்தும் வருகின்றன. இதனால் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் 25 வீதமான இலங்கை மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மேலும் இலங்கையின் தற்போதைய பொருளாதார அரசியல் நெருக்கடிகளுக்கு பிரதான காரணம், 1977 ஆம் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க கொண்டு வந்த நவதாராளமய பொருளாதாரக் (Neo liberal economy) கொள்கையே. தே.ம.க., சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய அணுகுமுறையை ஏற்படுத்தி, நவதாராளமய பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இலங்கையின் சகல இன மக்களின் சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கும் சகல துறைகளில் நிலவும் ஊழல்களை ஒழிக்கவும் தகுதியானவர்கள் ஆட்சியில் அமர வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தே.ம.க, அவ்வாறான தகுதியைக் கொண்டிருக்கிறார்களா என்பது 2025 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் தெரிய வரும் என்பதை நிட்சயமாக நாங்கள் நம்பலாம்.


***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** *sunvaanavil@gmail.com*

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** *http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

# தமிழும் யெச்சூரியும்!



**இ**ந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் [Communist Party of India (Marxist) - CPI (M) ] தேசிய பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி (Sitaram Yechury) உடல்நலக்குறைவு காரணமாக கடந்த செப்ரெம்பர் 12ந் திகதி டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் (All India Institute of Medical Science - AIIMS) காலமானார். இந்திய அரசியலின் மிக முக்கிய ஆளுமைகளில் ஒருவராக திகழ்ந்த இவர், 1952 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 12ந் திகதி சென்னையில் தெலுங்கு பேசும் குடும்பத்தில் பிறந்தார். ஆந்திரப் பிரதேசத்தின் காகிநாடாவை பூர்விகமாகக் கொண்ட வைதீக பிராமண குடும்பம் இவருடையது.

1975 ஆம் ஆண்டு டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்ட தோழர் சீதாராம் யெச்சூரி, தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக அவசர நிலை காலத்தில் கைது செய்யப்பட்டவர். 1985 ஆம் ஆண்டு முதல் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினராகவும், 1992 ஆம் ஆண்டு முதல் அரசியல் தலைமைக்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் யெச்சூரி செயல்பட்டு வந்தார். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அக்கட்சியின் பொதுச் செயலாளருக்கான தேர்தலில் வெற்றி பெற்று மூன்றாவது முறையாக அந்தப் பொறுப்பை கவனித்து வந்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடான பீப்பிள்ஸ் டெமாக்கரசி (Peoples Democracy) இன் ஆசிரியராக யெச்சூரி 20 ஆண்டுகளாக செயலாற்றியுள்ளார். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், இந்துத்துவாவை எதிர்த்த போராட்டத்தில் இவர் கூடுதலான பங்களிப்பு செய்திருக்கிறார். 'இந்து ராஷ்டிரம் என்பது என்ன?', 'மதவெறியும், மதச்சார்பின்மையும்' ஆகிய புத்தகங்கள் இவரது முக்கியமான பங்களிப்புகளாகும். மிகச் சிறந்த பாராளுமன்ற உறுப்பினராக திகழ்ந்தார். இரண்டு முறை மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கங்களை உருவாக்கும் முயற்சியில் இவர் முக்கிய பங்களிப்பினை வழங்கியிருக்கிறார்.

சீதாராம் யெச்சூரி அவர்களின் உடல், மருத்துவப் படிப்பு மற்றும் ஆராய்ச்சிக்காக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு தானமாக வழங்கப்பட்டது.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 ஆம் ஆண்டு ஜூன் 23 முதல் ஜூன் 27 வரையிலான 5 நாட்கள் கோயம்புத்தூரில் கொடிசியா வளாகத்தில் நடைபெற்றது. கோயம்புத்தூரில் 2010 இல் நடைபெற இருந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு ஈடாக, அன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் கலைஞர் இந்த மாநாட்டை ஒருங்கிணைத்து இருந்தார்.

இம்மாநாட்டில் சி.பி.ஐ(எம்) [CPI (M)] சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சீதாராம் யெச்சூரி கலந்துகொண்டு மாநாட்டில் உரையாற்றினார். சீதாராம் யெச்சூரி ஆற்றிய உரை பின்வருமாறு:

**பெருமைமிகு சான்றோர்களே,**
**அன்பிற்கினிய நண்பர்களே,**

வணக்கம். ஒன்பதாவது உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் பங்கேற்க என்னை அழைத்தமைக்காக மாநாட்டின் அமைப்பாளர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே எட்டு உலகத்தமிழ் மாநாடுகள் நடைபெற்றிருந்த போதும், இந்த மாநாடு வரலாற்றில் தனித்து நிற்கிறது.

நான் தெலுங்கு குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தமிழ்நாட்டிலும் எனக்கு ஒரு பங்குண்டு என்று கோரும் உரிமை எனக்கு உண்டு. இன்று சென்னை என்று அழைக்கப்படுகிற மதராஸ் நகரில்தான் நான் பிறந்தேன். அந்தக்காலத்தில் பலராலும் அந்த நகரம் சென்னைப் பட்டணம் என்று அழைக்கப்பட்டது. மொழி மற்றும் பண்பாட்டில் நமக்குள் பல பொதுப்பண்புகள் உண்டு. யாதும் ஊரே யாவரும் கேளிர் அதில் ஒன்று. அனைத்து ஊரும் என் சொந்த ஊரே, அனைவரும் என் உறவினரே.

பி.பி.சி தொலைக்காட்சியில் சுவையான நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்தேன். அதன் பெயர் இந்தியாவின் கதை. ஆதிகாலத்தில் ஆபிரிக்காவிலிருந்து மனிதர்கள் புலம்பெயர்ந்து வந்தது குறித்து அந்தத் தொடரில் விளக்கப்பட்டது. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், மனித மரபணுவியல் ஆய்விற்கும் நாம் நன்றி கூறவேண்டும். அந்த நிகழ்ச்சியில் ஆதிகாலத்தில் ஆபிரிக்காவிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்களின் மிச்ச சொச்சத்தில் காணப்பட்ட எம்130 மரபணு தமிழ்நாட்டின் மேற்குத்தொடர்ச்சி மலையில் வாழ்ந்த கள்ளர் மக்களிடம் காணப்பட்ட மரபணுவுடன் ஒத்திருந்ததாக அந்த நிகழ்ச்சியில் கூறப்பட்டது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏ. பிச்சப்பன் இதைப் பார்த்து வியந்து, இவர்கள் நம் எல்லோருக்கும் மூதாதையர்களாக இருக்கலாம் என்று குறிப்பிட்டார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஆதாம் ஆபிரிக்காவிலிருந்து வந்தார் என்று கொண்டால், ஏவாள் இந்தியாவிலிருந்து வந்தார் என்று கூறலாம். எனவே உண்மையில் இது தாய்நாடு தான். மனித வளர்ச்சியின் துவக்கப்புள்ளியாக

இருந்த தமிழகத்தில் வாழ்வதற்காக நாம் உண்மையிலேயே பெருமை கொள்ளலாம்.

மொழியின் பரிணாம வளர்ச்சி என்பது சமூக பரிணாம வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகும். காரல்மார்க்ஸ், மொழியை சிந்தனையின் உடனடி வெளிப்பாடு என்று கூறுவார். சிந்தனை தோன்றிய காலத்திலேயே மொழி தோன்றிவிட்டது. மொழி என்பது சிந்தனையின் நடைமுறை.

மொழி என்பது சமூகத்தின் விளைச்சல்களில் ஒன்று. சமூகத்தின் இயக்கத்தோடு இணைந்து மொழியும் இயங்குகிறது. சமூக வளர்ச்சியோடு இணைந்து மொழியும் வளர்ந்தோங்குகிறது. சமூகம் மறையும்போது மொழியும் மறைந்துவிடும். சமூகத்திற்கு அப்பால் மொழி என்று ஒன்று இருக்க முடியாது. மொழி என்பது சமூகத்தின் வரலாற்றுடன் பிரிக்க முடியாத வகையில் பின்னிப் பிணைந்துள்ளது. சமூகத்தின் வரலாற்றோடு இணைந்து மொழியின் வரலாற்றை ஆய்வு செய்யும் போதுதான் மொழியை உருவாக்கியவர்கள் மற்றும் வளர்த்தெடுத்தவர்கள் குறித்தும் மொழி மற்றும் அதன் வளர்ச்சிப்போக்கை குறித்தும் புரிந்து கொள்ள முடியும்.

மொழி என்பது சிந்தனையுடன் நேரடியாக பிணைக்கப்பட்டிருப்பதன் மூலம், வார்த்தைகளை உருவாக்கி பதிவு செய்கிறது. வார்த்தைகளிலிருந்து வாக்கியங்களை கோர்க்கிறது. இவ்வாறு மனிதனின் அறிவாற்றலுடன் கூடிய சிந்தனையும், சாதனையும் மனித சமூகத்திற்கிடையே சிந்தனைகளை பரிமாற்றம் செய்துகொள்வதை சாத்தியமாக்குகின்றன.

ஒட்டுமொத்தத்தில் மொழி சமூகத்தில் சேவை செய்வதற்காக, மக்கள் தங்களுக்குள் கலந்துரையாடுவதற்காக சமூகத்தின் உறுப்பினர்கள் ஒத்திருப்பதற்காக, குறிப்பிட்ட சமூகம் தனிப்பட்ட மொழியினை உருவாக்கிக்கொள்வதற்காக, மக்களின் வர்க்க நிலை குறித்து பொருட்படுத்தாமல் அவர்கள் அத்தனை பேருக்கும் சமமாக சேவை செய்வதற்காக, மிகவும் நுட்பமான முறையில் மொழி உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஒட்டுமொத்த மக்களுக்கும் பொதுவானதொரு மொழியாக நிற்பதிலிருந்து அது தடம்மாறி செல்லுமானால், மற்ற சமூக குழுக்களிடமிருந்து அன்னியப்பட்டு, சில சமூக குழுக்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்குமானால், அது தன்னுடைய அறப்பண்புகளை இழந்துவிடுமானால், சமூகத்தின் ஒட்டு மொத்த மக்கள் மத்தியில் ஊடாடும் சாதனமாக இருப்பதிலிருந்து அது தன்னை துண்டித்துக் கொண்டுவிடுகிறது. விரைவில் அது சில சமூக குழுக்களின் பிதற்றலாக மாறி தரம் தாழ்ந்துவிடும். விரைவில் அந்த மொழி மறைந்துவிடும்.

இலத்தீன் போன்ற உலகின் ஏனைய செம்மொழிகளைப்போல் அல்லாமல், தமிழ் தழைத்தோங்கி வளர்ந்துகொண்டே இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், அது மக்கள் மத்தியில், குறிப்பாக எளியமக்கள் மத்தியில் உயிரோட்டமான தொடர்பை இடையறாது வைத்துக் கொண்டிருப்பதே ஆகும்.

மாநாட்டின் சின்னத்தில் சிந்துசமவெளி நாகரீகத்தின் உருவச்சித்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பாக ஒன்றை தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும். பெருமதிப்பிற்குரிய தொல்பொருள் ஆய்வாளர் டொக்டர் ஐராவதம் மகாதேவன் முந்தைய மாநாட்டின்போது சமர்ப்பித்த ஓர் ஆய்வுக்கட்டுரையில், சிந்துசமவெளி நாகரீக கல்வெட்டுகள் திராவிட பண்பாட்டிற்கு சொந்தமானவையாக இருக்கலாம் என சுட்டிக்காட்டியிருந்தார். சிந்துசமவெளி நாகரீகத்தை சேர்ந்த மக்களுக்கும் திராவிட இனமக்களுக்கும் இடையிலான நாகரீகத் தொடர்ச்சியை நிறுவிட அவர் முனைந்தார்.

சிந்துசமவெளி எழுத்துக்களின் பொருளை உணர்தல் எனும் சீரிய பணியை ஆற்றி, அதற்காக கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினைப் பெற்றுள்ள டொக்டர் அஸ்கோ பர்போலாவும் (Asko Parpola) கூட சிந்துசமவெளி எழுத்துக்கள் பழமையான தமிழுக்கு மிகவும் நெருக்கமாக உள்ள திராவிட எழுத்துக்கள் என்று கூறியிருப்பதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பல்வேறு மொழிகளுக்கிடையே காணப்படும் பொதுமைப்பண்புகள் மற்றும் அவை நவீனகாலத்தில் பெற்றுள்ள வளர்ச்சி, அவற்றின் செறிவான பண்பாட்டு மரபு ஆகியவற்றை ஆய்வுக்கு உட்படுத்தி, மேலும் வளர்த்தெடுப்பதில் கவனம் செலுத்தவேண்டும். தென்னிந்தியாவில் பேசப்படும் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளையும் எடுத்துக்காட்டாக கொள்வோம். 2005 ஆம் ஆண்டில் தமிழுக்கு மிகவும் பொருத்தமான முறையில் செம்மொழித் தகுதி வழங்கப்பட்டது. தொடர்ந்து 2008 ஆம் ஆண்டில் தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளுக்கு செம்மொழித் தகுதி வழங்கப்பட்டது.

கடந்த தலைமுறையில் காபியின் மணத்தை நுகர்ந்துகொண்டு வானொலியில் திருமதி. எம். எஸ் சுப்புலெட்சுமி அவர்களின் இசையை கேட்டுக்கொண்டும் அதிகாலையில் எழும் பழக்கத்தை கொண்டிருந்தோம். கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் என்று அழைக்கப்படும் தியாகராஜர், ஷியாமாசாதிரி, முத்துசாமி தீட்சிதர் ஆகிய மூவருமே அவர்களது தாய்மொழி வேறு வேறாக இருந்தாலும் தெலுங்கு மொழியில் தான் தங்களது இசைப்பாடல்களை வடித்தார்கள். ஆயினும் இந்த இசை கர்நாடக இசை என்றுதான் அழைக்கப்படுகிறது. இவ்வாறு வேற்றுமைக்குள் இணக்கமான ஒற்றுமை காணும் பண்பு மிகவும் உன்னதமானது. தெலுங்கில் பாடப்பட்ட இசையை சிரமமின்றி தமிழிலோ அல்லது கன்னடத்திலோ மொழி மாற்றி இசைத்திட முடியும். இதுதான் நம்மிடையே உள்ள பொதுமைப்பண்பு.

இந்த எளிய உண்மையை மறுத்து, தஞ்சாவூருக்கு அருகிலுள்ள திருவையாற்றில் நடைபெற்ற தியாகராசர் உற்சவத்தின்போது திருமதி. எம். எஸ். சுப்புலெட்சுமி அவர்களை குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் பாட அனுமதிக்கவில்லையாம். அதற்கு ஒரே காரணம், அவர் தெலுங்கு மொழியில் பாடாமல் தமிழில் பாடினாராம். வரலாறு நமக்கு போதித்துள்ள உன்னதப் பண்புகளை மேம்படுத்துவதன் மூலம் இத்தகைய இழிமுயற்சிகள் தடுக்கப்படவேண்டும்.

தேசிய இனத்தை வரையறை செய்யும் நான்கு அவசியமான அம்சங்களில் ஒன்றாக மொழியை நாங்கள் கருதுகிறோம். விடுதலைப்போராட்டம் நடந்துகொண்டிருந்த காலத்தில் இத்தகைய உணர்வின் அடிப்படையில் தான் மொழிவழி மாநிலம் என்ற முழக்கத்தை முன்வைத்தோம். தெலுங்கு பேசும் மக்களுக்காக விசால ஆந்திரா, மலையாள மொழி பேசும் மக்களுக்காக ஐக்கிய கேரளம், மராத்தி மொழி பேசும் மக்களுக்காக சம்யுக்த மகாராஷ்ட்டிரா மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று போராடினோம். அதேபோல் தமிழ்நாட்டிலும் தமிழ் மொழியின்

மேன்மைக்காக கம்யூனிட்டுகள் மகத்தான பங்களிப்பினை செய்துள்ளனர்.

இந்த இடத்தில் தியாகி சங்கரலிங்கனாரை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும். மதராஸ் ராஜதானி என்ற பெயரை தமிழ்நாடு என்று மாற்றக்கோரி அவர் 64 நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தார். தாம் இறந்தபிறகு தன்னுடைய உடலை கம்யூனிஸ்ட் கட்சியிடம்தான் ஒப்படைக்கவேண்டும் என்று அவர் குறிப்பிட்டது நினைவுகூரத்தக்கது.

முதுபெரும் சுதந்திரப்போராட்ட வீரரும் தொழிற்சங்கத் தலைவருமான பி.ராமமூர்த்தி, ப.ஜீவானந்தம், என்.சங்கரய்யா ஆகியோர் ஒன்றுபட்ட சென்னை ராஜதானி சட்டமன்றத்தில் தாய்மொழியில்தான் பேசுவோம் என்று பிரகடனம் செய்து, தமிழில்தான் பேசினார்கள். ஏ.நல்லசிவன் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபோது தமிழில் தந்தி கொடுக்கும் முறைக்காக போராடினர். இவர்கள் அனைவரும் உண்மையில் தமிழுக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதற்கான போராட்டத்தில் நம் முன்னோடிகளாக விளங்கினார்கள். மக்களின் மொழியில் ஆட்சி நடைபெறாவிட்டால் மக்களாட்சி என்ற வார்த்தைக்கே அர்த்தமில்லை என்று அவர்கள் நம்பினார்கள்.

திருவள்ளுவர் கூறியுள்ளது போல, ‘காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்’ (அதாவது காட்சிக்கு எளிமையும், கடுஞ்சொல் கூறாத மன்னனைத்தான் உலகம் புகழும் என்பது இதன் பொருள்). மக்களாட்சி வெற்றிகரமாக நடந்திட, அரசு நிர்வாகத்துடன் எளிதில் அணுகும் தன்மை மிகவும் முக்கியமாகும். ஆளுபவர்களையும் ஆளப்படுபவர்களையும் இணைத்திடும் ஒன்றாக மட்டுமின்றி, மொழி என்பது ஆளுபவர்களும் ஆளப்படுபவர்களும் எத்தகைய உறவை கொண்டுள்ளனர் என்பதை நிர்ணயிக்கும் கருவியாகவும் உள்ளது.

மொழி சமூகத்தின் மிக முக்கியமான அடையாளமாக விளங்குகிறது. அரசியல், பண்பாடு மற்றும் சமூக வாழ்வில், மக்களின் அன்றாட நடவடிக்கைகளிலும் அவர்களுக்கிடையே எண்ணங்களை பரிமாறிக்கொள்ளும் கருவியாகவும் மொழி திகழ்கிறது.

இந்தப்பின்னணியில் அரசுகள் மிக முக்கியமான பணியை ஆற்றவேண்டிய நிலையில் உள்ளன. மும்மொழியைத் திணிக்கும் நேரு மாடல் என்ற வலைக்குள் சிக்கிவிடாமல், அந்தந்த மண்ணில் பேசப்படும் மொழிகளின் உரிமை நிலைநிறுத்தப்பட வேண்டும், குறுகிய மொழி வெறி மனப்பான்மையால் இதை சாதிக்க முடியாது. அனைத்து மொழிகளும் சமமாக நடத்தப்படுவதோடு அந்த மொழிகள் தழைத்தோங்கி வளர சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.




இன்றைய உலகில் எந்தவொரு மனிதனும் தன்னை தனித்த அடையாளத்துடன் நிறுத்திக்கொள்ள முடியாது. இந்தியா போன்ற பரந்து விரிந்த ஒரு நாட்டில் பல்வேறு மொழிகள் பேசக்கூடிய சூழலில் பன்முக அடையாளத்தை பேணவேண்டியுள்ளது.

எழுதப்பட்ட வரலாறு நெடுகிலும் இன்றைய யதார்த்த வாழ்விலும் இந்தியர்களாகிய நாம் நமது தாய்மொழி, பணியாற்றுமிடத்தில் பயன்படும் மொழி, படைப்பாற்றலை வெளிப்படுத்தும் மொழி என்று குறைந்தபட்சம் மூன்று மொழிகளை பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். நான் முன்பு குறிப்பிட்ட கர்நாடக இசை எடுத்துக்காட்டு இதற்கும் கூட பொருந்தும். இவ்வாறு நாட்டின் பல்வேறு அடையாளங்களில் எந்தவொரு குறிப்பிட்ட அடையாளத்திற்கும் தனி முக்கியத்துவம் அளித்துவிடாமல், அனைத்து அடையாளங்களையும் பேணி வளர்க்க வேண்டியது அரசின் கடமையாகும்.

எனது உரையை நான் நிறைவு செய்வதற்கு முன்பு, இந்த மாநாட்டின் கவனத்திற்கு சில ஆலோசனைகளை முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழுக்கு பழமையான மரபு உண்டு. இன்றைக்கும் மிகவும் பொருந்தக்கூடிய பெருமைமிகு இலக்கியங்களை தமிழ் தன்னகத்தே கொண்டுள்ளது. இது தவிர, ஏட்டில் எழுதப்படாத வாய்மொழி வரலாற்றுச் செல்வங்களையும் அபரிமிதமாக கொண்டுள்ள மொழி, தமிழ். இத்தகைய நாட்டுப்புற இலக்கியங்களை உடனடியாக ஆவணப்படுத்தி என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் தன்மை கொண்டதாக மாற்றி பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். நாட்டுப்புற இசை, நாடகம், கூத்து, நாட்டுப்புறக்கலைகள் அனைத்தும் மதிப்புமிக்க பொக்கிஷங்களாக கிராமப்புற மக்கள் மத்தியில் விளங்குகின்றன. இவற்றை பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை இம்மாநாடு எடுக்குமென்று நான் நம்புகிறேன்.

தமிழ்ச் சமூகம், தேசிய இயக்கம், சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம், தலித் மற்றும் பெண்ணுரிமை இயக்கம் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களால் செழுமையடைந்த ஒன்றாகும். இந்த இயக்கங்களின் இலக்கிய பங்களிப்பு மூலம் தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் ஏற்பட்டுள்ள செல்வாக்கு மற்றும் வளர்ச்சி குறித்து இம்மாநாடு சரியான அறிவியல் கண்ணோட்டத்துடன் முழுமையான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கம் போன்ற அமைப்புகளை இத்தகைய மாநாட்டின் அங்கமாக மட்டுமின்றி, இத்தகைய திட்டங்களிலும் இணைத்துக்கொள்ள வேண்டும்.

‘பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்’ என்கிறது திருக்குறள். அதாவது அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமை உடையவர்கள் பெருமைக்குரியவர்கள் ஆவார்கள்.

தமிழ் மொழியை மேலும் தழைத்தோங்கச் செய்வதற்காகவும், மேலும் வளர்ப்பதற்காகவும் அதன் வளமான பாரம்பரியங்களிலிருந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து கற்றுக்கொள்வோம்.

---

மனிதன் தன் வாழ்நாளின் இறுதியில் திரும்பி பார்க்கும் பொழுது தான் மக்களுக்காக வாழ்ந்தோம் என்ற மனநிறைவு இருக்க வேண்டும்.

**–லெனின்**

# இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை கனடா முற்றாக நிறுத்த வேண்டும்!

## -பலஸ்தீன ஆதரவு அமைப்புகள் வலியுறுத்தல்




கனடா இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கும் செயல்பாட்டை தடை செய்வதை நோக்கி நகர்ந்துள்ளது. இந்த தகவலை கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜொலி (Melanie Joly) அறிவித்துள்ளார்.

இதுபற்றித் தெரிவித்த அவர், கனடா தற்போது நடைமுறையில் உள்ள இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கும் 30 அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்துள்ளதாகவும், அமெரிக்காவுக்கு ஊடாக மிகவும் சக்தி வாய்ந்த கியூபெக் மாகாணத்தில் உற்பத்தி செய்யும் 50,000 மோட்டர்களை (Mortars) வழங்குவதை எதிர்ப்பதாகவும் அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கக்கூடாது என்ற கனடிய மக்களின் தொடர் வலியுறுத்தலாலும், கனடிய மக்கள் மேற்கொண்ட பலஸ்தீன ஒருமைப்பாட்டு நடவடிக்கைகளாலும், இந்த நடவடிக்கைகளை பல்லாயிரக்கணக்கான கனடிய இளைஞர்கள் ஆதரித்ததாலும் சாத்தியமானது என, பலஸ்தீனத்திலும் மத்திய கிழக்கிலும் நீதிக்கும் சமாதானத்துக்குமான கனடிய அமைப்பு (CJPME) தெரிவித்துள்ளது.

என்றபோதிலும், இஸ்ரேலுக்கான ஆயுத விநியோகத்தை முழுமையாக நிறுத்துவதற்கு மேலும் பல நடவடிக்கைகள் தேவை என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரித்த இஸ்ரேலுக்கான 20 பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதப்பொதியில், கனடாவின் கியூபெக் மாகாணத்தில் உள்ள ஜெனரல் டைனமிக்ஸ் (General Dynamics) என்ற கொம்பனி தயாரிக்கும் 50,000 ஆயிரம் மோட்டர்கள் இடம் பெறுவதை நிறுத்துமாறு கோரி கனடாவின் பல்வேறு அமைப்புகளால் 13,500 மினஞ்சல்கள் கனடிய அரசாங்கததுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோரிக்கையில் பின்னர் கனடாவின் புதிய ஜனநாயக கட்சி (New Democratic Party – NDP), பசுமை கட்சி (Green Party) என்பனவும், பல மனித உரிமை அமைப்புகளும் இணைந்து கொண்டன.

இந்தக் கோரிக்கைக்கு பதிலளித்த கனடிய வெளிவிவகார அமைச்சர், கனடாவிலிருந்து இஸ்ரேலுக்கு ஆயுதங்களையோ, ஆயுத உதிரிப்பாகங்களையோ அனுப்புவதை கனடிய அரசாங்கம் தடை செய்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும், அமெரிக்காவில் வைத்து பொருத்தப்பட்டு, இஸ்ரேலுக்கு வழங்கப்படும் F – 35 சண்டை விமானங்களுக்கும், Apache ரக ஹெலிகொப்டர்களுக்கும் உரிய உதிரிப்பாகங்களை கனடா வழங்குவதையும், கனடிய அரசாங்கம் தடை செய்ய வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் கோரியுள்ளன.

அத்துடன், இஸ்ரேலுக்கு இனிமேல் ஆயுதங்கள் வழங்கப்படமாட்டாது என கனடிய அரசாங்கம் அறிவித்தாலும், இந்த அறிவிப்புக்கு முன்னர் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள், உதாரணமாக இஸ்ரேலுக்கு 2025 வரை ஆயுத தளபாடங்கள் வழங்குவதற்காக செய்து கொள்ளப்பட்ட 95 மில்லியன் டொலர்கள் பெறுமதியான உடன்படிக்கைகள் நடைமுறையில் இருக்கும் என்பதையும் மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கனடிய சிவில் சமூகத்தின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாகவே, கனடிய அரசு இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கும் 30 அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்திருப்பதாக சுட்டிக்காட்டிய மனித உரிமை அமைப்புகள், இந்த ரத்து அறிவிப்பை கனடிய அரசாங்கம் எந்த நேரமும் மீளப் பெறலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

அண்மையில் ஐ.நா.வில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட, இஸ்ரேல் ஆக்கிரமித்திருக்கும் பலஸ்தீனப் பகுதிகளிலிருந்து ஒரு வருட காலத்துக்குள் வெளியேற வேண்டும் என்ற தீர்மான வாக்கெடுப்பின் போது, கனடா அதில் பங்கேற்காது ஒதுங்கிக் கொண்டது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது எனவும், பலஸ்தீன ஆதரவு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

எனவே, கனடிய அரசாங்கம் இஸ்ரேல் – பலஸ்தீன பிரச்சினையில் தனது தெளிவான நிலைப்பாட்டை வெளியிட வேண்டும் என அவை கோரியுள்ளன.

---

*நாங்கள் எப்போதுமே தனிநபர்களை மதிப்பிடுவதில்லை நாங்கள் கொள்கைகளையே மதிப்பிடுகிறோம். கம்யூனிஸ்ட் கட்சிக்கு அமைப்புதான் மிகப்பெரிய ஆயுதம். அது கட்சியின் புரிதலை மக்களிடம் கொண்டு செல்லும் வாகனம். அமைப்பு பலவீனம் அடைந்தால் உங்கள் அரசியல் நிலைப்பாடு எவ்வளவு சரியானதாக இருந்தாலும் அது அர்த்தமற்றதாகிவிடும்.*

***-சீத்தாராம் யெச்சூரி***

# முதலாளித்துவத்தின் கோர முகங்கள் டொனால்ட் டிரம்ப்-கமலா ஹாரிஸ்




கமலா ஹாரிஸூம் டிரம்ப்பும் கலந்து கொண்ட நேரடி தொலைக்காட்சி விவாதத்தின் போது தங்கள் எஜமானர்களின் கற்பனைகளை முன்வைத்தனர். கோர்ப்பரேட் ஊடகங்கள் (corporate-owned media) வழியாக 90 நிமிடங்களுக்கு வடிகட்டப்பட்ட அந்த தொலைக்காட்சி விவாத அரங்கில், யார் வென்றாலும் அமெரிக்க தொழிலாளர்களுக்கு முக்கிய நன்மைகளைச் செய்ய முடியும் என்பது போல நடித்தனர்.

பல பில்லியன் டொலர் இலாபம் கொழிக்கும் கோர்ப்பரேட்களின் ஆதரவு கொண்ட 2024 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரும் கடந்த செப்டம்பர் 10 அன்று 67 மில்லியன் ஏபிசி – ரிவி (ABC-TV) பார்வையாளர்கள் முன் மோதிக் கொண்டனர்.

பின்னர் கருத்துக் கணிப்பாளர்கள், ஜனநாயகக் கட்சியின் கமலா ஹாரிஸ் 66–34 என்ற விகிதத்தில் விவாதத்தை "வென்றதாக" பதிவு செய்தனர். தி நியூயார்க் டைம்ஸ் (The New York Times) இன் உண்மை சரிபார்ப்பாளர்கள், குடியரசுக் கட்சியின் டொனால்டு டிரம்ப் 33 முறை பொய் சொன்னதாகவும் உண்மைகளை திரித்ததாகவும் கண்டறிந்தனர். ஹாரிஸின் ஆதரவாளரான தி டைம்ஸ் (The Times), அடுத்த நாள் ஹாரிஸ் ஒரே ஒரு சிறிய துல்லியமற்ற அறிக்கையை மட்டுமே வெளியிட்டதாகக் கூறிக்கொண்டது.

**இருவருமே பொய் சொன்னார்கள்**

ஆனால் உண்மையில், எல்லா முதலாளித்துவ தேர்தல்களிலும் உள்ளது போல, இரு வேட்பாளர்களும் விடுபட்டவற்றை மறைத்து பொய்தான் சொன்னார்கள். உண்மையில், யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், முதலாளித்துவ அரசின் விவகாரங்களை நிர்வகிக்கும் அடிப்படை முடிவுகள் தேசிய தொலைக் காட்சியில் அல்ல, மாறாக திரை மறைவில், நாட்டின் உயர்மட்டத்தினர் தங்கள் பிரதிநிதிகளை நியமித்து தங்கள் நலன்களை உறுதிப்படுத்தும் – 7 டிரில்லியன் டொலர் பெறுமான – 4,000 பக்க அமெரிக்க ஆண்டு பட்ஜெட்டை வரைய வைக்கும் முடிவானது, கோர்ப்பரேட் இயக்குநர்களின் அறைகளில்தான் எடுக்கப்படுகின்றது.

இவற்றில் போர் இயந்திரம் அதாவது, அமெரிக்க இராணுவம் மற்றும் அமெரிக்க "தேசிய பாதுகாப்பு அரசு" க்கான ஆண்டு பட்ஜெட் ஒதுக்கீடு 1 டிரில்லியன் டொலர். ஜனாதிபதியாக வருபவரின் கையெழுத்துக்களில், பெரும் கோர்ப்பரேட்டுகளுக்கு வரி சலுகைகள், ஏழைகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கான சமூக திட்டங்களில் பெரும் வெட்டுக்கள், அதன்மூலம் ஆளும் வர்க்கத்தின் பெட்டகங்களுக்கு மிகப்பெரும் நிதி மடை மாற்றப்படுவது ஆகியவை அடங்கும்.

**டிரில்லியன் டொலர் ஆதாயம்**

இந்த வேட்பாளர்களுக்கு ஆகும் செலவு 10 பில்லியன் டொலர் ஆகும். இது, வேட்பாளர்களின் கோர்ப்பரேட் ஆதரவாளர்களுக்கு பல டிரில்லியன் டொலர் ஆதாயம் கிடைக்கும் என்பதுடன் ஒப்பிடும் போது, அது வெறும் சிறு தொகையாகும். 2024 இற்கான தேர்தல் செலவுகள், 2020 சாதனை அளவான 8 பில்லியன் டொலரை மிஞ்சியுள்ளது.

எல்லா தொழிலாளர் வர்க்க வேட்பாளர்களும் அனைத்து நடைமுறைக் காரணங்களை காட்டி விலக்கப்பட்டுள்ளனர். ஜில் ஸ்ரெய்ன் (கிரீன்ஸ்) - Jill Stein (Greens)- மற்றும் கோர்னல் வெஸ்ட் ("சுயேச்சை") - Cornel West ("independent")- போன்ற "இடதுசாரி" முதலாளித்துவ சீர்திருத்தவாதிகள் கூட பெரும்பாலும் ஒரு வழியாகவோ, மற்றொரு வழியாகவோ வாக்குச் சீட்டிலிருந்து நீக்கப்படுகிறார்கள். முதலாளித்துவத்தின் கீழ் வேறு எதுவும் இருக்க முடியாது.

இந்த நிலையில்தான் கமலா ஹாரிஸூம் டிரம்பும் நடத்திய விவாதத்தில், தங்கள் எஜமானர்களின் கற்பனைகளை முன்வைத்தனர். கோர்ப்பரேட் ஊடகங்கள் வழியாக 90 நிமிடங்களுக்கு வடிகட்டப்பட்டு, யார் வென்றாலும் அமெரிக்க தொழிலாளர்களுக்கு முக்கிய மாற்றங்களை செய்ய முடியும் என்பது போல நடித்தனர். உண்மையிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது.

**கமலா ஹாரிஸின் குணம் தெரிந்தது**

கமலா ஹாரிஸ், தமது விவாதத்தின் போது, அமெரிக்க இராணுவத்தின் "கொல்லும்" (lethal) ஆதிக்க சக்தியை பெருமைப்படுத்தினார்.

வல்லுநர்களால் விவாதத்திற்கு முன் ஐந்து நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட சாமர்த்தியமான, நன்கு தயாரிக்கப்பட்ட கமலா ஹாரிஸ், விவாதம் தொடங்குவதற்கு முன் அதிர்ச்சியூட்டும் வகையில் தனக்கு ஒதுக்கப்பட்ட மேடையைத் தாண்டி புதிதாக, பாசிச இனவெறி சொற்பொழிவு நிகழ்த்தும் டிரம்பிடம் கை குலுக்கச் சென்றார். "உலகின் மிகவும் கொடூரமான முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்தியை வழிநடத்த முழுமையாக தகுதி வாய்ந்த வலிமையான கறுப்பினப் பெண் நான் உங்கள் பொய் சொல்லும், இனவெறி பெருமிதம் கொண்ட ஆணவத்தை நசுக்க வந்துள்ளேன்" என்று சொல்வது போல், ஹாரிஸ் நடந்து கொண்டார்!

அமெரிக்க இராணுவ–தொழில் வளாகமான பென்ரகன் (Pentagon) இடம் யாரையும் "கொல்லும்" திறன்

உள்ளது என்பது அவரது தேர்ந்தெடுக்கப்பட்ட விவாதச் சொல். அந்த ஒற்றை வார்த்தையில் அவர், அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களை அச்சுறுத்தும் அல்லது கேள்வி கேட்கும் எந்த நாட்டின் மீதும் மரணம் மற்றும் அழிவைப் பொழிய, முடக்கும் தடைகளை விதிக்க, முடிவற்ற தலையீட்டு மற்றும் ஆக்கிரமிப்புப் போர்களை, ட்ரோன் (drone) போர்களை, சிறப்பு நடவடிக்கைப் போர்களை மற்றும் படுகொலைப் போர்களை நடத்த முழுமையாக தயாராக இருப்பதை தெளிவுபடுத்தினார்.

### ஏகாதிபத்திய விசுவாசம்

கமலா ஹாரிஸ் உண்மையில் வலிமையான ஜனாதிபதியாக இருப்பேன் என வாக்குறுதி அளித்தார். தற்போது கிட்டத்தட்ட செயல் இழந்துவிட்ட தனது எஜமானர் ஜோ பைடனின் நடப்பு பலஸ்தீன காஸா மற்றும் மேற்குக்கரை இனப்படுகொலை கொள்கைகளில் இருந்து ஒரு சிறிதளவு விலகி இருப்பதாகக் காட்டுமாறு முன்கூட்டியே கெஞ்சிய – தனது குறைந்து வரும் தாராளவாத/இடதுசாரி – ஆதரவாளர்களுக்கு அவர் ஏமாற்றத்தையே பரிசாக அளித்தார்.

ஹாரிஸ் மத்திய கிழக்கில் யூத இனவெறி இஸ்ரேலின் நடப்புப் போர்களுக்கும் ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனில் நடக்கும் அமெரிக்காவின் மறைமுகப் போருக்கும் மற்றும் அதற்கு அப்பாலும் தனது ஏகாதிபத்திய ஆதரவாளர்களுக்கு முழுமையான விசுவாசத்தை உறுதிப்படுத்தினார். டிரில்லியன் டொலர் அமெரிக்க புதை படிம எரிபொருள் (fossil fuel) தொழிலின் இலாபங்களுக்கும், மரணம் விளைவிக்கும் அவர்களின் கொடிய இயற்கை வளச் சுரண்டல் நடவடிக்கைகளுக்கும் எந்த தடையும் விதிக்க மாட்டேன் என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

உண்மையில், உக்ரைனில் ரஷ்யா ஆதரவு கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை 2014 இல் கவிழ்த்த அமெரிக்க ஆதரவு பாசிசசக்திகள் தலைமையிலான ஆட்சிக்கவிழ்ப்பின் பின்னணியில் இருந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முக்கிய நோக்கம், அந்த நேரத்தில் உலகின் முன்னணி புதை படிம எரிபொருள் (North Stream குழாய் வழி) விநியோகஸ்தராக இருந்த ரஷ்யாவுக்கு பதிலாக, தனது தற்போதைய மிகப் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்படுகிற பாறையிடுக்கு இயற்கை எரிவாயு (natural gas) இருப்புகளை ஐரோப்பாவிற்கு கொண்டு சென்று, ஐரோப்பிய சந்தையை முழுமையாகக் கைப்பற்றுவது ஆகும்.

போர்வெறியை வெளிப்படுத்திய கமலா ஹாரிஸ், பின்னர் விவாதத்தின் போது அப்பட்டமான கள்ள மௌனத்தை தேர்ந்தெடுத்தார், இஸ்ரேல் போர் இயந்திரத்திற்கு மேலும் 10 பில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டது குறித்த மௌனம், 110 நாடுகளில் உள்ள 1100 அமெரிக்க இராணுவ தளங்களை மேலும் வலுப்படுத்தும் 1 டிரில்லியன் டொலர் அமெரிக்க இராணுவ ஆண்டு பட்ஜெட் குறித்த மௌனம், 43 நாடுகள் மீது விதிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் கொடிய பொருளாதாரத் தடைகள் குறித்த மௌனம், என மௌனம்! மௌனம்!! மௌனம்!!!

அவர் தேர்ந்தெடுத்த "கொல்லும்" என்ற வார்த்தை, ஹாரிஸ் அமெரிக்க ஏகாதிபத்திய அரசியல் மற்றும் நடைமுறைக்கு புதியவர் அல்ல என்பதை முற்றிலும் தெளிவுபடுத்த போதுமானதாக இருந்தது.

### வெறி பிடித்த டிரம்ப்

இதற்கிடையில் பம்பரமாக சுழலும், பெயர் சூட்டி அழைக்கும், தொடர்ந்து பொய் சொல்லும், சுய புகழ்ச்சி கொண்ட, இனவெறி கொண்ட டொனால்ட் டிரம்ப், விவாதத்தின் போது அமெரிக்க ஏகாதிபத்திய அரசியலை இந்த அல்லது அந்த சர்வதேச நபருடனான தனது தனிப்பட்ட இராஜதந்திரம் அல்லது உறவுகளின் வாயிலாக நிலைநாட்ட முடியும் என்று வாதிட்டார். ஜனாதிபதியாக இருந்தபோது, ஆப்கானிஸ்தானில் "தலிபான்களின் தலைவர்", "அப்துல்" (அப்துல் கானி பராடர் - Abdul Ghani Baradar- என்ற பெயரை அவரால் நினைவு கூர முடியவில்லை) இற்கு அவரது வீட்டின் புகைப்படத்தையே அனுப்பி, பேச்சுவார்த்தைகளில், அமெரிக்க நிபந்தனைகளை மறுத்ததால் தலிபான் தலைவரின் வீடும் குடும்பமும் குண்டுவீச்சில் சின்னா பின்னமாக்கப்படும் என்று எச்சரிக்கை செய்ததாக, புதுச்சரடு ஒன்றை அவிழ்த்துவிட்டார்.

20 ஆண்டுகால – தோல்வியுற்ற – அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் போர் 2.6 டிரில்லியன் டொலர் செலவில் நடந்தது. போரின் உச்சக்கட்டத்தில் 1,20,000 இற்கும் மேற்பட்ட அமெரிக்க துருப்புக்கள் நிறுத்தப்பட்டன. அவற்றில் பாதி பிளாக்வாட்டர் (Blackwater) மற்றும் பிற தனியார்மயமாக்கப்பட்ட கூலிப்படை மற்றும் போர்க்குற்றம் புரியும் படைகள். இவை அனைத்துக்கும் அமெரிக்காவால் நிதியளிக்கப்பட்டது. இவையெல்லாம் டிரம்பின் அசட்டுத்தனமான விவாத உரையில் இருந்து விடுபட்டன. 20 ஆண்டு காலப்போரில், நேரடி மற்றும் மறைமுகமாக 4,70,000 ஆப்கான் பொதுமக்கள் கொல்லப்பட்டனர், 2,442 அமெரிக்க துருப்புக்கள் இறந்தனர் மற்றும் 20,666 பேர் காயமடைந்தனர் என்பதும் அவரது உரையில் குறிப்பிடப்படவில்லை. உலகின் மிகவும் ஏழ்மையான நாடுகளில் ஒன்றான ஆப்கானிஸ்தான், மிகவும் சக்தி வாய்ந்த நாட்டை தோற்கடித்து மீண்டும் 'வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து' விடுதலை பெற்றது என்பதும் டிரம்பின் பேச்சில் இடம்பெறவில்லை.

டிரம்ப்போ, கமலா ஹாரிஸோ, ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய நீண்ட போரின் நோக்கங்களில் ஒன்று, ரஷ்யாவின் எல்லையில் அணு ஆயுதங்களுடன் அமெரிக்க இராணுவத் தளங்களை நிறுவுவதும், ரஷ்யாவை எதிர்காலத்தில் துண்டாடுதலும்தான் என்பதை பார்வையாளர்களுக்கு தெரிவிக்க விரும்பவில்லை. மேலும் ஆப்கானிஸ்தானின் மிகப்பெரும் அளவிலான லித்தியம் (lithium) வளங்களை அமெரிக்கா கட்டுப்படுத்துவதும் குறிப்பிடப்படவில்லை.

### அரசியல் பின்னடைவின் இழிவான காட்சி

மொத்தத்தில் 2024 செப்டம்பர் 10 அன்று நடை பெற்ற டொனால்ட் டிரம்ப் மற்றும் கமலா ஹாரிஸ் இடையிலான விவாதம், கடுமையான நெருக்கடியில் சிக்கியுள்ள அமெரிக்க அரசியல் அமைப்பின் பிரதிபலிப்பாக அமைந்தது. டிரம்பின் பாசிச வெறி கொண்ட மனப் பிறழ்வுப் பேச்சுக்களும், போர்வெறி பிடித்த கமலா ஹாரிஸின்

பிற்போக்குத்தனமான கருத்துக்களும், அமெரிக்க முதலாளித்துவத்தின் கொடூரமான முகத்தை வெளிப்படுத்தின.

90 நிமிட விவாதம் முழுவதும், தொழிலாளர்களை பாதிக்கும் எந்த முக்கிய சமூகப் பிரச்சனைகளும் விவாதிக்கப்படவில்லை. சமத்துவமின்மை, வறுமை, வேலை இழப்பு, தேங்கிய ஊதியம் போன்றவை குறித்து எந்த கேள்வியும் எழுப்பப்படவில்லை. கோவிட்-19 தொற்றால் இன்றும் கூட வாரம் 1,000 பேர் இறப்பதையும், தொற்று தொடர்ந்து பரவுவதையும் இரு வேட்பாளர்களும் குறிப்பிடவில்லை.

டிரம்ப் தனது ஆட்சியின் போது பங்குச்சந்தை உயர்வை "சிறந்த பொருளாதாரம்" என்று கூறினார். அதே நேரம், நாட்டில் நிலவும் ஆழமான அதிருப்தியை குடியேற்றத் தொழிலாளர்கள் மீது திருப்பி விட முயன்றார். "சிறைகள், மனநல மருத்துவமனைகள், மனநோய் ஆசிரமங்களில் இருந்து குடியேறிகள் நாட்டிற்குள் பாய்ந்து வருகின்றனர்" என்று அவர் குரூரமான பொய்களை அவிழ்த்துவிட்டார்.

ஓஹியோ (Ohio) இன் ஸ்பிரிங்ஃபீல்ட் (Springfield) இல், ஹைட்டி (Haiti) நாட்டின் தொழிலாளர்கள் குறித்து அவர் பரப்பிய பொய்யான பிரச்சார வதந்தியை டிரம்ப் திரும்பத் திரும்ப இந்த விவாதத்திலும் குறிப்பிட்டார். "ஸ்பிரிங்ஃபீல்டுக்கு போகாதீர்கள். அங்கு வந்தவர்கள் நாய்களை சாப்பிடுகிறார்கள். பூனைகளை சாப்பிடுகிறார்கள். அங்கு வசிப்பவர்களின் செல்லப்பிராணிகளை சாப்பிடுகிறார்கள்" என்று அவர் வெறுப்பைத் தூண்டும் வகையில் பேசினார்.

மறுபுறம் இஸ்ரேலின் இனப்படுகொலையை நியாயப்படுத்திய கமலா ஹாரிஸ், ஈரானுக்கு எதிராக போர் அச்சுறுத்தல் எச்சரிக்கை விடுத்தார்: "இஸ்ரேலுக்கு தன்னைத் தற்காத்துக் கொள்ளும் திறனை நான் எப்போதும் வழங்குவேன். குறிப்பாக ஈரான் மற்றும் அதன் பிரதிநிதிகள் இஸ்ரேலுக்கு ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பேன்" என்றார்.

சீன விவகாரத்தில் டிரம்பை வலதுசாரி கண்ணோட்டத்தில் இருந்து விமர்சித்தார் ஹாரிஸ். "சீனாவின் இராணுவத்தை நவீனமயமாக்க உதவும் வகையில் அமெரிக்கச் சிப்களை (chips) அவர்கள் விற்றனர்" என்று டிரம்ப் நிர்வாகத்தை குற்றம் சாட்டினார்.

**அமெரிக்க மக்கள் எழ வேண்டும்**

நவம்பர் 5 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே உள்ளன. கருத்துக் கணிப்புகளில் இரு வேட்பாளர்களும் விடாக் கண்டன் – கொடாக் கண்டன் என்ற நிலையில் உள்ளனர். தோல்வியுற்றால் தேர்தல் முடிவுகளை ஏற்க மாட்டேன் என டிரம்ப் அறிவித்துள்ளார். குடியுரிமைச் சான்றிதழ் இல்லாத இலட்சக்கணக்கான – குறைந்த வருமானம் கொண்ட – வாக்காளர்களை நீக்கும் நோக்கில் தற்போதைய ஆளும் குடியரசுக் கட்சியினர் புதிய சட்ட முன்வரைவை கொண்டு வந்துள்ளனர்.

மொத்தத்தில் இரு வேட்பாளர்களின் நேரடி விவாதம் அமெரிக்க முதலாளித்துவத்தின் கொடூரமான முகத்தை வெளிப்படுத்தியது. பிற்போக்குத்தனம், சர்வாதிகாரம், போர் ஆகியவற்றை எதிர்க்க, அமெரிக்க தொழிலாளர் வர்க்கத்தின் உண்மையான நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சோசலிச இயக்கத்தை அந்நாட்டு மக்கள் கட்டமைப்பது அவசியமாகிறது.

(அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் 2 முறை போட்டியிட்ட சோசலிஸ்ட் அக்சன் (Socialist Action) தேசிய செயலாளர் ஜெப்ரி மேக்ளர் (Jeffrey Mackler) மற்றும் வேர்ல்ட் சோசலிஸ்ட் (World Socialist) இணையதளத்தில் எழுத்தாளர்களில் ஒருவரான எரிக் லண்டன் (Eric London) ஆகியோர் எழுதியுள்ள கட்டுரைகளின் சுருக்கம்)

**தொகுப்பு : எஸ்.பி.ஆர்**

# பட்டியலில் இருந்து கியூபாவை நீக்கு!

பிரேசில், ஈகுவடோர், ஆர்ஜென்ரீனா, பொலிவியா உள்ளிட்ட 35 நாடுகளின் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் இந்தியா, கொலம்பியா, மலேசியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பாகிஸ்தான் உட்பட 73 நாடுகளில் இருந்து இடதுசாரி கட்சி எம்.பிக்கள் உள்ளிட்ட 600 எம்.பிக்கள், தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து கியூபாவை நீக்க வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

சர்வதேச முற்போக்கு அமைப்பினால் (Progressive international ) ஒருங்கிணைக்கப்பட்டு இந்த கடிதம் எழுதப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த தீவிர கம்யூனிச வெறுப்பு கொண்ட அதிதீவிர வலதுசாரியான டொனால்ட் டிரம்ப், கியூபாவை, தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் சேர்த்தார்.

ஏற்கனவே அமெரிக்க ஏகாதிபத்தியம் கியூபா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. கியூபாவைக் குற்றம்சாட்ட எந்த அடிப்படைக் காரணமும் இல்லாத நிலையில், கம்யூனிச வெறுப்பின் அடிப்படையில் எடுக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான நடவடிக்கையென அமெரிக்காவின் மீது கடுமையான விமர்சனம் வைக்கப்பட்டு வருகின்றது.

டிரம்பிற்கு பிறகு ஜனாதிபதியான பைடனும், தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து கியூபாவை நீக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அமெரிக்காவின் இத்தகைய கொடிய நடவடிக்கைகளின் காரணமாக உலகளவில் வர்த்தகம் மேற்கொள்ள இயலாமல் கியூபா கடுமையான நிதி பற்றாக்குறையில் தள்ளப்பட்டுள்ளது.

கியூப மக்களின் வாழ்க்கையில் பொருளாதார நெருக்கடியை உருவாக்கி, அந்நாட்டு அரசியலில் கொந்தளிப்பை ஏற்படுத்திவிடலாம் என அமெரிக்கா பல ஆண்டுகளாக முயற்சித்து வருகின்றது. இந்நிலையில் தான் கியூபா மீதான பொருளாதார தடைகளை நீக்கக்கோரியும், அதே போல தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்கக் கோரியும் இடதுசாரிகள், முற்போக்கு அமைப்புகள் மீண்டும் வலுவாக குரல் எழுப்பியுள்ளனர்.

இந்தக் குரலுக்கு அமெரிக்கா செவிசாய்க்க வேண்டும். ஐ.நா. சபை மற்றும் உலக நாடுகள், இதனை வலுவாக வற்புறுத்த வேண்டும். ஜனநாயகம் பற்றியும் பிற நாடுகளில் மக்களின் உரிமைகள் பற்றியும் வாய்கிழியப் பேசும் அமெரிக்கா, கியூபாவை நசுக்குவது கடும் கண்டனத்திற்குரியது. கியூபா போன்றே வடகொரியா மீதும் அமெரிக்க ஏகாதிபத்தியம் எண்ணற்ற தடைகளை விதித்துள்ளது. சோசலிச நாடுகள் மீதான இத்தகைய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாக்குதலை தடுக்காவிடில் உலகின் பல நாடுகள் இந்த ஆபத்தில் சிக்கும் அபாயம் ஏற்படும்.

# பலஸ்தீனியர்களால் கடத்தப்பட்ட விமானத்தில் இலங்கைச் சிறுவனின் அனுபவம்



**1970** ஆம் ஆண்டு செப்ரெம்பர் 6ந் திகதி மும்பாயிலிருந்து பஹ்ரைனிற்கு வந்தடைந்த BOAC Vickers VC10 775 என்ற விமானம், பலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி (Popular Front for the Liberation of Palestine - PFLP) ஆல் கடத்தப்பட்டு ஜோர்டான் டாசன் (Dawson) விமானத்தளத்திற்கு கொண்டு வரப்பட்டது.

PFLP இன் இந்தத் திட்டத்தின் நோக்கம் இரண்டு அம்சங்களைக் கொண்டிருந்தது. ஒன்று, பிரித்தானியாவின் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பலஸ்தீனிய சுதந்திர போராட்ட வீரப்பெண்மணி லைலா காலித்தை (Leila Khaled) விடுவிப்பது. மற்றது, இஸ்ரேலில் உள்ள சியோனிச ஆட்சியின் கைகளில் சிக்கியுள்ள பலஸ்தீனியர்களின் அவலநிலையை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவது. அந்த விமானத்தில் இலங்கைக் குடும்பத்தைச் சேர்ந்த புத்திரன், இலண்டனில் உள்ளதொரு விடுதியுடன் கூடிய பாடசாலையில் (boarding school) சேருவதற்காக பயணித்தார் என்பது அநேகமான இலங்கையர்களுக்கு இதுவரையில் தெரியாது.

---

13 வயதான சிறுவனாக இருந்த இக்பால் காசிம் (Iqbal Cassim), பாடசாலை விடுதியில் தங்கியிருந்து தனது படிப்பைத் தொடங்குவதற்காக, இலண்டனுக்கு செல்வதற்கு கொழும்பு வழியாக மும்பாயிற்கு பயணித்தார். இவர் தனது தாயுடன் பயணம் செய்து கொண்டிருந்தார். BOAC (British Overseas Airways Corporation) விமானம் 775 இல் இலண்டன் செல்வதற்காக, முதலில் அவர்கள் கொழும்பிலிருந்து மும்பாய்க்கு விமானத்தில் வந்து, அங்கு இரண்டு இரவுகள் தங்கியிருந்தார்கள்.

'நாங்கள் விமானத்தில் ஏறியமர்ந்தோம்' என்று ஆரம்பித்த இக்பால், தொடர்ந்து:

அந்த நாட்களில் நாங்கள் இறுதி இலக்கை சென்றடைவதற்கு முன்னர், விமானங்கள் இரண்டு அல்லது மூன்று இடங்களில் தரித்து நிற்கும். இன்றைய விமானப் பயணங்களைப் போலல்லாமல், பயணிகள் அரிதாகவே நேரடியாகத் தங்கள் இலக்கினைச் சென்றடைந்தனர்.

மும்பையிலிருந்து புறப்பட்ட விமானப் பயணத்தின் முதல் கட்டம் பஹ்ரைன் வரையிலுமாக இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து, காலை உணவு பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தவேளையில், அந்த விமானத்தை பலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணியினர் தம்வசம் கைவசப்படுத்திக் கொண்டனர்.

ஒரு விமானப் பணிப்பெண், விமானத்தின் இருக்கைகளுக்கிடையேயான நடைபாதையூடாக அலறிக்கொண்டு ஓடி வந்தபோதுதான், ஏதோ தவறு நடக்கின்றது என்பதை முதலில் நாங்கள் அறிந்து கொண்டோம். என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்று நாங்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்திருந்தோம். பின்னர் தலைமை விமானி ஒலிபெருக்கியில் வந்து, அந்த விமானம் பலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி உறுப்பினர்களால் கைப்பற்றப்பட்டுள்ளதாக கூறினார். நான் விமானத்தின் முன்பகுதியைப் பார்த்தபோது, கடத்தல்காரர்களில் ஒருவர் கையில் கைத்துப்பாக்கியுடன் நடைபாதைகள் ஒன்றில் நின்று கொண்டிருப்பதைக் கண்டேன்.

**உலக அரசியல்**

உலக அரசியலில் என்ன நடக்கின்றது என்பதற்கான எனது முதல் அறிமுகம் அதுதான். தரையில் இருந்து 30,000 அடி உயரத்தில், அத்துடன் 13 வயதில், இது எவரும் சொல்ல விரும்பும் ஓர் அனுபவம் கிடையாது.

சிறிது நேரம் கழித்து, தலைமை விமானி மற்றொரு அறிவிப்பினை வெளியிட்டார். அப்போது விமானத்தின் கட்டுப்பாட்டு அறையில் (cockpit) இருந்த ஒரு கடத்தல்காரர் ஒலிபெருக்கியில் தன்னையும் தனது அமைப்பையும் அறிமுகப்படுத்திக் கொண்டார். தீங்கு விளைவிக்கும் எதனையும் செய்யக்கூடாது என்று அவர் எங்களை எச்சரித்தார்.

இதற்கிடையில் விமானம் லெபனான் தலைநகரம் பெய்ரூட் (Beirut) மீது வட்டமிட்டுவாறு, தரையிறங்குவதற்கு அனுமதிக்காக காத்திருந்தது. எங்களால் பார்க்க முடிந்ததெல்லாம் கடலை மட்டும்தான். ஒரு கட்டத்தில் நாங்கள் கடலில் இறங்கப் போகிறோமோ என்று நான் பயந்தேன். மரண பயம் எங்கும் வியாபித்து பயமாக இருந்தது.

இஸ்ரேலிய அதிகாரிகளால் பலஸ்தீனிய மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருவது குறித்து சர்வதேச கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டதாக விமானக் கடத்தல்காரர்கள் எங்களிடம் தெரிவித்தார்கள்.

கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மத நம்பிக்கைகளை உலகிற்கு வழங்கிய நிலம் மற்றும் எண்ணெய் நிறைந்த நிலம் என்பதைத் தவிர, எழுபதுகளில், 'மத்திய கிழக்கு' (மேற்கு ஆசியா) பற்றி இலங்கையர்களுக்கு அதிகமாக எதுவும் தெரிந்திருக்கவில்லை, மேற்கு ஆசியா துருக்கியால் ஆளப்பட்ட ஒரு நிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பது கூட இன்றும் பலருக்குத் தெரியாது.

முன்னர் ஒட்டோமான் பேரரசு (Ottoman Empire) கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த பிரதேசங்கள் மற்றும் மக்கள் நிறைந்த பெரும் நிலப்பரப்பினை நேச நாடுகள் பங்குபோட்டு, அதனை பல புதிய நாடுகளாகப் பிரித்தன.

அவர்கள் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் செயற்கையான எல்லைகளை மீண்டும் வரையத் தொடங்கினர். இதனால் புதிதாக வரையறுக்கப்பட்ட எல்லைகள் தொடர்பாக பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு இடையே பகைமை மற்றும் மோதல்களை உருவாக்குவதும் ஆக்கிரமிப்பு காலனித்துவ சக்திகள் மீதான சீற்றத்தை திசை

திருப்புவதும் ஆகும்.

பலஸ்தீன நிலத்தில் – மேற்கு ஆசியாவில் துருக்கிய நிலங்களின் முந்தைய பகுதியிலும் – புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பு (UNO) இதுவரை பிரிக்கப்படாத பலஸ்தீன நிலத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, 55% நிலப்பரப்பை புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ரேல் அரசுக்கு வழங்கியது.

இரண்டாம் உலகப் போரின் போது ஐரோப்பாவில் நாசி ஆக்கிரமிப்பின் போது இடம்பெயர்ந்த யூதர்களை, ஐரோப்பிய பிரதான நிலப்பரப்பிற்கு அப்பால் தள்ளிக் குடியமர்த்த ஐரோப்பா ஓர் இடத்தைத் தேடியது. யூதர்கள், ஐரோப்பிய மக்களால் கருணையுடன் பார்க்கப்படவில்லை. அத்தோடு, அவர்கள் பெரும்பாலும் வட்டி வாங்குபவர்களாகவும், கையறு நிலைவரை மனிதர்களைச் சுரண்டுபவர்களாகவுமே பார்க்கப்பட்டனர்.

மேற்கு ஆசியாவில் இந்த வேண்டாத யூத மக்களை மீண்டும் குடியமர்த்துவது என்பது, அதன் இருப்புக்கு மேற்கைச் சார்ந்திருக்கும் ஒரு வாடிக்கையாளர் அரசை உருவாக்குவதாகும். இது மேற்கு நாடுகள் தங்கியிருக்கும் எண்ணெய் வளமிக்க பகுதியில் சீர்குலைவின் முகவர்களாக சேவை செய்யும். மேற்கு ஆசியப் பிராந்தியத்தை கொந்தளிப்பில் வைத்திருக்கவும், அதன் எண்ணெய் வளங்களில் மேற்கத்திய மேலாதிக்கத்தைத் தொடரவும் சரியானதொரு மூலோபாயம் இது ஆகும்.

பலஸ்தீனப் பிரிவினையின் போது, முஸ்லிம் குடிமக்கள் 403,795 நபர்களைக் கொண்டிருந்ததுடன் மக்கள் தொகையில் 86–87% ஆகவும் இருந்தனர். கிறிஸ்தவர்கள் 43,659 பேர், மக்கள் தொகையில் 9%. யூத மக்கள் 15,011 பேர், மக்கள் தொகையில் 3% மட்டுமே.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினராக இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னரான இரண்டு ஆண்டு காலம் (1947 முதல் 1948 வரை) வன்முறை நிறைந்ததாக இருந்தது. 1.9 மில்லியன் மக்கள்தொகையில் குறைந்தது 750,000 பலஸ்தீனியர்கள் தேச எல்லைகளுக்கு அப்பால் அகதிகளாக ஆக்கப்பட்டனர்.

சியோனிச படைகள் வரலாற்று சிறப்புமிக்க பலஸ்தீனத்தின் 78 சதவீதத்திற்கும் அதிகமான பகுதிகளை கைப்பற்றி, சுமார் 530 கிராமங்களையும் நகரங்களையும் இனச்சுத்திகரிப்பு செய்து அழித்தனர். இஸ்ரேல் அரசு நிறுவப்பட்ட 1948 மே 14 அளவில் 70 இற்கும் மேற்பட்ட படுகொலைகள் உட்பட தொடர்ச்சியான வெகுஜன அட்டூழியங்களில் 15,000 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

**படுகொலைகளும் அட்டூழியங்களும்**

இன்று இருக்கும் அளவுக்கு தகவல் தொடர்பு வளர்ச்சி அடையாததால், அன்றைய காலகட்டத்தில் இஸ்ரேல் செய்து வந்த படுகொலைகள் மற்றும் அட்டூழியங்கள் குறித்து உலகின் பெரும்பகுதிக்கு தெரியாது இருந்தது.

முடிவற்ற பயணம் போல் தோன்றிய பிறகு, விமானம் தரையிறங்க அனுமதி பெற்றது. பயணிகள் விமானத்தின் ஜன்னல்களை மூடி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

விமானம் எரிபொருள் அல்லது வேறு எதனையும் எடுத்துக் கொள்ளவில்லை. சுமார் முப்பது முதல் நாற்பது நிமிடங்களுக்குப் பிறகு, மேலும் இரண்டு பயணிகள் விமானத்தில் ஏறியதாக பயணிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் எங்களை ஜோர்டான் (Jordan) தலைநகர் அம்மான் (Amman) இலுள்ள டாசன் (Dawson) புரட்சிகர விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்ல இருந்தனர்.

இவர்கள் இருவரும் விமானத்தில் ஏறியதும் விமானத்தின் கதவுகளை மூடிவிட்டு விமானம் புறப்பட்டது. இவை எல்லாவற்றையும் இப்போதும் வீடியோவில் காணக்கூடியதாக இருக்கின்றது. 'ஒவ்வொரு முறையும் இந்த வீடியோவைப் பார்க்கும்போது, எனக்கு மயிர்க்கூச்செறிகின்றது' என்று இக்பால் கூறினார். 'நான் உங்களிடம் விவரிக்கும் அனைத்து நிகழ்வுகளும் என் மனதில் பதிந்துள்ளன, மேலும் ஒவ்வொன்றையும் தெளிவாக வண்ணநிறப் படமாக என்னால் நினைவுகூர முடிகிறது' என்று அவர் கூறினார்.

இவர்கள் இருவரும் விமானத்தில் ஏறியதும், விமானம் புறப்பட்டு சூனியத்தின் மத்தியாக புலப்படுகின்ற அம்மானில் தரையிறங்கியது. விமானம் பாலைவனத்து மணலில் தரையிறங்கியது.

விமானம் தரையிறங்கியபோது மாலை நேரமாகிவிட்டது. பின்னர் உடனடியாகவே ஜெனரேட்டர்களில் மின்சாரத்தை சேமிப்பதற்காக, தலைமை விமானி, விமானம் காற்றோட்டம் வசதியாக இருக்கும் வகையில் அவசரகால வெளியேறும் கதவுகளைத் திறந்தார். பாலைவனம் எங்களைச் சுற்றிலும் இருப்பதை என்னால் காண முடிந்தது. தூரத்தில் மேலும் இரண்டு விமானங்களும், சற்றுத் தூரத்தில் ஒட்டகங்கள் இருப்பதையும் எங்களால் பார்க்க முடிந்தது. நாங்கள் முதல் இரவை விமானத்தில் பனிப்பொழிவு இருந்ததால், இரவுகள் மிகவும் குளிராக இருந்தது. அன்று மாலை நாங்கள் சாப்பிட்ட உணவை பணிப்பெண்கள் பரிமாறினார்கள். முந்தைய உணவில் எஞ்சியிருந்தவற்றையே பயணிகளிடையே பிரித்துக் கொடுத்தார்கள். நாங்கள் குடித்த தண்ணீர் PFLP யால் எங்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் எங்கள் விமானத்தின் தலைமை விமானி அந்தத் தண்ணீர் தொடர்பாக திருப்தியடைந்தவராக இல்லை. அதனால் அதனைச் சுத்திகரிக்கப்பதற்காக உப்பு மாத்திரைகளை இட்டார். துரதிர்ஷ்டவசமாக, நாங்கள் அந்த தண்ணீரைக் குடித்தபோது, எங்களுக்கு இன்னும் அதிக தாகம் ஏற்பட்டது. அதனால் கிட்டத்தட்ட 24 மணி நேரமாக நான் தண்ணீர் அதிகம் குடிக்கவில்லை.

விமானத்தில் இருந்த பயணிகளில் கிட்டத்தட்ட ஐம்பது முதல் அறுபது சதவீதம் பேர் கோடை விடுமுறை முடிந்து இங்கிலாந்து திரும்பிய மாணவர்கள். கடத்தல்காரர்கள், ஒரு 'எதிர்ப்புப் படையணி' ('resistance force') ஆக அவர்கள் உண்மையில் நினைவுகூரப்பட வேண்டும். நாங்கள் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று அவர்கள் எங்களுக்கு உறுதியளித்தனர். பிரித்தானியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர்களின் சகாக்களில் ஒருவரின் விடுதலைக்காக நாங்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தோம். பின்னர் அவர்கள் ஒரு பையை கொண்டு வந்தனர், அதில் எங்கள் கடவுச்சீட்டுகளை வைக்கச் சொன்னார்கள்.

பின்னர் எங்கள் கடவுச்சீட்டுகள் எங்களிடம் திருப்பித் தரப்பட்டபோது, அதில் PFLP விசா முத்திரையிடப்பட்டிருந்தது.

செப்டம்பர் 11, 2001 அன்று அமெரிக்காவில் 3 விமானங்கள் கடத்தப்படும் வரை, உலகம் கண்ட மிகப்பெரிய கடத்தல் இதுவேயாகும். கடத்தப்பட்ட முதல் விமானம் Pan Am 747 ஆகும், அது பின்னர் அழிக்கப்பட்டது, இரண்டாவது ஒரு ஹெலா (Hela) விமானம்... அம்ஸ்ரர்டாமிலிருந்து நியூயார்க் நோக்கி சென்று கொண்டிருந்தது என்று நான் நம்புகிறேன், பிரித்தானியாவில் தரையிறங்கியது, கடத்தல்காரர்களில் ஒருவர் கொல்லப்பட்டார், மற்றவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

அவ்வாறு பிடிக்கப்பட்டவர், பிரித்தானியாவில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்த லைலா காலித் (Leila Khaled) தான் அவர்.

நாங்கள் முதல் இரவை விமானத்தில்

கழித்தோம். செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நான் எப்போதும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். ஏனென்றால் அவர்கள் ரின்களில் அடைக்கப்பட்ட உணவுகளையும் ஏனையவற்றையும் கொண்டு வந்து தந்தார்கள்.

மறுநாள் விமானத்தை சுத்தம் செய்வதற்காக எங்களை விமானத்திலிருந்து இறக்கிவிட்டார்கள்.

நாங்கள் கீழே இறக்கி விடப்பட்டவுடன், TWA மற்றும் Swiss Air ஆகிய இரண்டு விமானங்கள் தரையிலிருப்பதை பார்க்க முடிந்தது. சுற்றிலும் கட்டிடங்கள் எதுவும் இல்லை, அவர்கள் விமானத்தில் PFLP சின்னத்தை வரைந்தனர். எங்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது என்று அவர்கள் திரும்பத் திரும்ப உறுதியளித்தனர். அவர்கள் எங்களிடம் மிகவும் அன்பாகவே நடந்து கொண்டார்கள்.

பலஸ்தீன மக்களுடனான எனது முதல் அறிமுகமும் அவர்களின் அரவணைப்பும் அதுதான். ஆயுதம் ஏந்திய இளம் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் என பலர் அங்கே இருந்தனர். தாங்கள் ஒரு எதிர்ப்புப் படையணி என்பதாலும், எவரும் எதிர்க்கக் கூடிய வல்லமை கொண்டவர்களாக தயாராக இருப்பதற்காகவும், பயிற்சி அளிக்கப்பட்டு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதாக அவர்கள் எங்களிடம் கூறினர்.

விமானத்தின் சில இருக்கைகளுக்கு கீழே வெடிகுண்டுகள் வைத்ததைக் கண்டதாக எனது தாயார் பின்னர் உறுதிப்படுத்தினார். நான் அதை பார்க்கவில்லை, ஆனால் என் அம்மா அதனைப் பார்த்தார் என்று கூறினார். வெளியிலிருந்து சக்திகள் எதுவும் உள்ளே வந்து, எங்களை மீட்க முயற்சிப்பதைத் தடுப்பதற்காகவே சில இருக்கைகளுக்கு கீழே வெடிகுண்டுகள் வைக்கப்பட்டன. அவ்வாறு எங்களை மீட்க முற்பட்டிருந்தால், நாங்கள் உட்பட அனைத்து பயணிகளுக்கும் அது பேரழிவாக இருந்திருக்கும்.

இரண்டாம் நாள் மதியம் பல மினி வான்கள் வந்து எங்களை ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர் – ஏதோவொரு இராணுவ கிளப் – அது என்னவென்று எனக்கு ஞாபகம் இல்லை. எங்களுக்கு அறைகள் வழங்கப்பட்டன. இரண்டரை நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் முதல் முறையாக குளிக்க முடிந்தது. எங்களுக்கு தேவையானவைகள் வழங்கப்பட்டன.

நாங்கள் அங்கேயே அன்றைய இரவைக் கழித்தோம். மறுநாள் மாலை எங்களை விடுவிக்கப் போவதாகவும், தூசி படிந்திருந்த எங்களது பொதிகளை (luggage) பெற்றுக் கொள்ளுமாறும்




கூறப்பட்டது.

எங்கள் பொதிகளை நாங்கள் அடையாளம் காட்டினோம். எங்களது கடவுச்சீட்டுகள் எங்களுக்கு வழங்கப்பட்டதா என்பது எனக்கு நினைவில்லை. மறுநாள் மாலை நாங்கள் விடுவிக்கப்பட்டதாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. PFLP போராளி லைலா காலிதை விடுவிக்க பிரித்தானியா அரசு ஒப்புக் கொண்டது.

**மினி வான்கள்**

நாங்கள் மீண்டும் மினி வான்களில் ஏற்றப்பட்டு, அம்மான் விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு இருட்டாக இருந்தது. அப்போது என்ன நேரம் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. ஒருவேளை இரவு சுமார் 10.00 மணியளவில் நாங்கள் அம்மான் விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கலாம். அங்கு மத்திய கிழக்கு விமானம் (Middle East Airlines - MEA) ஒன்று தரித்து நிற்பதாகவும், அது எங்களை நிக்கோசியாவுக்கு (Nicosia – சைப்ரஸின் தலைநகர்) அழைத்துச் செல்லப் போவதாகவும் சொல்லப்பட்டது.

நாங்கள் விமான நிலையத்திற்குச் சென்றபோது (நாங்கள் சிறைபிடிக்கப்பட்டு ஏறத்தாள மூன்று நாட்களாகி விட்டது.), அங்கு விமானம் இல்லை. பின்னர் நாங்கள் அம்மான் இன்ரர்கொன்ரினென்ரல் ஹோட்டலுக்கு (Amman Intercontinental Hotel) அழைத்துச் செல்லப்பட்டோம். நாங்கள் அங்கு வருகைதந்ததும், களேபரம் வெடித்தது. நிருபர்கள், தொலைக்காட்சி புகைப்படக்கார்கள், வானொலி ஒலிபரப்பாளர்கள் என ஏராளமானோர் அங்கு இருந்தனர். நாங்கள் வான்களில் இருந்து இறங்கியவுடன், பல்வேறு நிருபர்கள் எங்களை கேள்விக்கணைகளால் துளைத்தனர். ஒரு பிரெஞ்சு நிருபர் என்னைத் தனிமைப்படுத்தி, நாங்கள் சிறைபிடிக்கப்பட்டிருந்த காலகட்டம் எப்படி இருந்தது என்று பிரெஞ்சு மொழியில் என்னிடம் கேட்டது எனக்கு நினைவிருக்கின்றது.

விடுதியுடன் கூடிய பாடசாலைக்கு நான் தயாராக வேண்டியிருந்ததால், நான் பிரெஞ்சு மொழியைப் படித்தேன். அத்துடன் நான் பிரெஞ்சு மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது பாடசாலையின் நிபந்தனைகளில் ஒன்றாக இருந்தது. எனவே நான் இலங்கையில் பிரெஞ்சு பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்றிருந்ததால், பிரெஞ்சு நிருபருக்கு பிரஞ்சு மொழியிலேயே பதிலளித்தேன். ஆனால் என் அம்மா மிகவும் சோர்வாக இருந்தார். அவளுக்கு இந்த அனுபவம் போதும் என்றிருந்ததால், என் கையை பிடித்து உள்ளே போகலாம் என்றாள்.

சரிவாகச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருந்த இன்ரர்கொன்ரினென்ரல் ஹோட்டலின் நுழைவாயிலை நோக்கி நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். நுழைவாயிலுக்கு மிக அண்மையாக, என் அம்மா வழுக்கி விழுந்து கையை முறித்துக் கொண்டார். அம்மாவின் கை தெட்டத்தெளிவாக உடைந்து துருத்திக் கொண்டிருப்பதை என்னால் காண முடிந்தது. எனினும் அது தோலைக் கிழிக்கவில்லை.

அவ்வளவுதான், கடந்த நாட்களின் அனுபவமும் அதிர்ச்சியும் எனக்கு மிகவும் அதிகமாக இருந்தது. என் அம்மாவின் அருகில் மண்டியிட்டு அழுதது எனக்கு நினைவிருக்கின்றது. இது எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது, என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நான் சத்தமிட்டு அழ ஆரம்பித்தேன். சிறிது நேரத்தில் ஏராளமான நிருபர்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டு கேள்விகள் கேட்டும் புகைப்படம் எடுத்துக் கொண்டும் இருந்தனர்.

அதிர்ஷ்டவசமாக, அங்கிருந்த ஒரு BOAC பிரதிநிதி, உள்ளே ஓடிச்சென்று, வலியைக் கட்டுப்படுத்துவதற்காக கொஞ்சம் பிரண்டியைக் கொண்டு வந்து என் அம்மாவுக்கு கொடுத்தார். அம்புலன்ஸ் விரைந்து வந்து என் அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றது. விமான பணிப்பெண்கள் என்னை கவனித்துக் கொண்டனர். நான் அவர்களின் அறையில் ஒரு மெத்தையில் அன்றைய இரவைக் கழித்தேன். நாங்கள் இப்போது ஏனைய பயணிகளிடமிருந்து பிரிக்கப்பட்டிருப்தால் என்ன நடக்கப் போகின்றது என்று அடுத்தநாள் நான் யோசித்துக்கொண்டிருந்தேன். எல்லாவிதமான விபரீதமான எண்ணங்களும் என் மனதில் ஓடிக் கொண்டிருந்தன.

**உள்நாட்டுப் போர்**

எனினும் விரைவில் ஏனைய மாணவர்கள் என்னைப் பார்க்க வந்தனர். ஹோட்டலின்

உச்சிக்குச் சென்று விஷயங்களைச் சரிபார்ப்பது போன்று, நாங்கள் ஒன்றாக சுற்றித்திரிய ஆரம்பித்தோம். இந்த நேரத்தில் பல ஜன்னல்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருப்பதை நாங்கள் அவதானித்தோம். உள்நாட்டுப் போர் ஒன்று நடக்கிறது என்பதை நாங்கள் சடுதியாக அறிந்து கொண்டோம்.

ஜோர்டான் மன்னர் ஹுசைனின் படைகள், ஜோர்டானில் பலஸ்தீனர்களுக்கு எதிராக சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அன்றைய தினம் நான் ஆஸ்பத்திரியில் இருக்கும் என் அம்மாவைப் போய்ப் பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அங்குதான் முதன்முறையாக பலஸ்தீன மக்களின் பரிவையும், விருந்தோம்பலையும், அரவணைப்பையும் கண்டேன்.

என் அம்மா படுக்கையில் படுத்திருந்தார். அம்மாவிற்கு பழங்கள் வழங்கியதோடு பலஸ்தீனிய பெண்கள் சூழ்ந்திருந்து அம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் அம்மாவை மிகவும் அக்கறையாகக் கவனித்தார்கள். பலஸ்தீனர்களின் மனிதாபிமானத்தையும் விருந்தோம்பலையும் கண்டு நான் வியந்து நின்றேன்.

பலஸ்தீனியர்கள் நடந்துகொண்ட விதத்தை என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது. அவர்கள் என் அம்மாவிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டனர். இப்போது கூட அதனை நினைத்துப் பார்க்கும்போது, என் கண்களில் கண்ணீர் வருகின்றது. ஏனென்றால் இத்தனை ஆண்டுகளுக்கு முன்பு நான் பார்த்ததை இப்போது கூட என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

அடுத்த நாள், நாங்கள் விடுவிக்கப்படப் போகிறோம் என்றும், எங்களுக்காக ஒரு விமானம் காத்திருக்கும் என்றும் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. என் அம்மா மீண்டும் ஹோட்டலுக்கு அழைத்து வரப்பட்டார். மீண்டும் நாங்கள் அனைவரும் மினி வான்களில் ஏற்றப்பட்டு, ஜோர்டான் சர்வதேச விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

அங்கே எங்களுக்காக காத்திருந்த விமானத்தில் நாங்கள் ஏறியதும் விமானம் – MEA airline – புறப்பட்டது. பயணிகள் அனைவரும் கைதட்டி ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து சிரிக்க ஆரம்பித்தனர்... மன அழுத்தத்தின் விடுதலை.

அது அம்மானிலிருந்து நிக்கோசியாவுக்கு செல்லும் ஒரு குறுகிய தூரச் சேவை. விமானம் நிக்கோசியாவில் தரையிறங்கி, நாங்கள் விமானத்திலிருந்து இறங்கினோம். சுமார் ஐம்பது யார் தொலைவில் அங்கே ஒரு BOAC விமானம் தயாராக இருந்தது.



*தற்போது ஜோர்டானில் வசிக்கும் 80 வயதாகும் லைலா காலித்*

MEA விமானத்தில் இருந்து இறங்கிய நாங்கள், இலண்டன் அழைத்துச் செல்ல இருந்த மற்றொரு விமானத்தை நோக்கி நடந்தோம். நாங்கள் மீண்டும் விமானத்தில் ஏறியபோது, மக்கள் கைதட்டி ஒருவருக்கொருவர் கட்டிப்பிடிக்கத் தொடங்கினர்.

அன்றைய தினம் பயணி ஒருவரின் பிறந்த நாளும் வந்ததால், விமான நிறுவனம் கேக் ஒன்றினை தயாராக வைத்திருந்தார்கள். கேக் வெட்டப்பட்டதுடன், அங்கே பாடல் மற்றும் அனைத்து வகையான கேளிக்கை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தனது முறிந்த கையைச் சுற்றிக்கட்டப்பட்டுள்ள கட்டுக்குள் வைத்துக்கொண்டு, என் அம்மாவும் நானும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டோம், ஆனால் எங்கள் இருவருக்குமே வீட்டிலிருக்கும் அப்பாவையும் உடன்பிறப்புகளையும் நினைத்து கவலையாக இருந்தது. அவர்கள் எப்படி இருக்கிறார்கள், மேலும் எங்கள் தொடர்பாக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மன அழுத்தங்களை எவ்வாறு தாங்கிய வண்ணம் இருக்கிறார்கள் என்று கவலைப்பட்டோம்.

இலங்கையில் இன்று போல், அன்றைய காலகட்டத்தில் இணைய வசதிகள் இருக்கவில்லை. இலண்டன் ஹீத்ரோ (Heathrow) விமான நிலையத்தில் எங்களை சந்தித்திருக்க வேண்டிய நபர், என் தந்தைக்கு தொலைபேசி எடுத்து விமானம் வரவில்லை என்று கூறியபோதுதான், ஏதோ தவறு நேர்ந்திருக்கின்றது என்ற முதலாவது செய்தி அவர்களைச் சென்றடைந்தது. அதே நேரத்தில் ஊடகச்செய்திகள் கடத்தலை அறிவிக்கத் தொடங்கின.

டட்லி சேனநாயக்கவுக்கு நெருக்கமாக இருந்த எனது தந்தைக்கு, அப்போதைய பிரதமர் திருமதி பண்டாரநாயக்கவுடனான தொடர்பை டட்லி சேனநாயக்கா ஏற்படுத்திக் கொடுத்தார். கடத்தப்பட்ட விமானத்தில் அவரது மனைவியும் மகனும் இருப்பதாகவும், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த தலையிட முடியுமா என்றும் அவர் பிரதமரிடம் கேட்டுக் கொண்டார்.

அப்போது ஆப்பிரிக்காவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் பிரதமர் பண்டாரநாயக்கா கலந்து கொண்டிருந்தார். அவர் எங்கள் சார்பாக தலையிடுவதாக உறுதியளித்தார். பலஸ்தீனிய தலைவர் யாசர் அரஃபாத்தை (Yasser Arafat) அவர் தொடர்பு கொண்டு, விமானத்தில் உள்ள இலங்கையர்கள் மற்றும் ஏனைய பணயக்கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தலையிடுமாறு கேட்டுக்கொண்டார்.

பணயக் கைதிகள் எவருக்கும் எந்தத் தீங்கும் வராது என்று அராஃபாத் திருமதி பண்டாரநாயக்கவிடம் உறுதியளித்தார்.

**அதிர்ச்சிகரமான அனுபவம்**

இது ஓர் அதிர்ச்சிகரமான அனுபவமாக இருந்த அதேவேளையில், நான் முதிர்ச்சியடைந்தேன் என்றுதான் நினைக்கிறேன். ஹீத்ரோ விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியதும், பயணிகளாகிய நாங்கள் அனைவரும் பாடி ஆரவாரம் செய்தோம். அனைவரும் நிம்மதியாக கைதட்டி சிரித்தனர். எங்கள் சோதனை காலம் முடிவுக்கு வந்தது.

எங்களுக்கு சரியான அரச உபசாரம் அளிக்கப்பட்டது. விமானம் ராணி முனைக்கு (Queens terminal) விரைந்தது. பயணிகள் அனைவரும் முண்டியடித்து இறங்க விரைந்தனர். ஆனால் என் அம்மாவின் காயம் காரணமாக நானும் என் அம்மாவும் அங்கேயே தங்கினோம்.

இங்கிலாந்து குடிவரவு அதிகாரிகள் எங்கள் கடவுச்சீட்டுகளை முத்திரையிட விமானத்திற்குள் வந்தனர். பின்னர் அம்புலன்ஸ் ஒன்று விமானத்திற்கு அருகில் வந்தது. நாங்கள் இருவரும் அம்புலன்ஸில் ஏறி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டோம். என் ஞாபகம் சரியாக இருந்தால், அந்த மருத்துவமனை ஹவுன்ஸ்லோ (Hounslow) இல் இருந்தது.

அம்மாவின் கைமுறிவைச் சுற்றிக்கட்டப்பட்டுள்ள கட்டு சரியாக அமைக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்க பிரித்தானியா அதிகாரிகள் விரும்பினர். மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுத்தும் மேலும் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றினைச் செய்து எங்களை வெளியே விட்டனர். விமானக் கடத்தல் அனுபவத்தால் எங்கள் விசாரணை முடிந்தது என்று நினைக்கிறேன். மறுநாள் நான் தொலைக்காட்சியில் பிபிசி

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# பலஸ்தீன மக்களுக்கு மோடி அரசு துரோகம்!



பலஸ்தீனத்தின் காஸா மற்றும் மேற்குக் கரையில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை ஓராண்டுக்குள் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற பரந்த ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 18.09.2024 அன்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரிக்காமல் நடுநிலை என்ற பெயரில் இந்தியா ஒதுங்கிக் கொண்டது கடும் கண்டனத்திற்கு உரியது. அணி சேரா அமைப்பை உருவாக்கிய பாரம்பரியம் கொண்ட இந்தியாவின் இந்த நிலைப்பாடு அமைதிக்கு எதிரானது. நாடுகளை ஆக்கிரமிக்கும் வெறிகொண்ட கொள்கைகளுக்கு ஆதரவானது.

சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைகளை பெற்ற பின்னரே இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஐ.நா பொதுச்சபையில் மொத்தமுள்ள 193 உறுப்புநாடுகளில் தீர்மானத்திற்கு ஆதரவாக 124 வாக்குகள் கிடைத்தன. அமெரிக்கா ஆதரவு நாடுகளான பிரான்ஸ், பின்லாந்து கூட தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துள்ளன. வாக்களிக்காத 43 நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

'பலஸ்தீனத்தில் ஹமாஸ் இயக்கத்தை ஒழித்துக்கட்டுகிறேன்' என்ற பெயரில் நுழைந்துள்ள இஸ்ரேல் இராணுவம் கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தி வருகின்றது. இந்ததாக்குதலில் இருந்து மருத்துவமனைகள் கூட தப்பவில்லை. இதுவரை 41 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். வீடுகளை இழந்து முகாம்களில் தங்கியுள்ளவர்கள் மீதும் ஈவு இரக்கமின்றி குண்டுகளை வீசி குழந்தைகள் பெண்கள் என அனைவரையும் இஸ்ரேல் இராணுவம் கொன்று குவித்து வருகிறது. பலஸ்தீனத்தின் பகுதிகளில் இஸ்ரேல் மக்களை குடியேற்றும் வகையில் புதிய குடியிருப்புகளை அமைத்து வருகிறது. இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்பதே ஐ.நா பொதுச்சபை தீர்மானத்தின் மையப்பொருள்.

ஏற்கெனவே இஸ்ரேல் ஆக்கிரமிப்பை எதிர்த்து சர்வதேச நீதிமன்றத்தில் தென் ஆபிரிக்கா முறையிட்டபோது இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு சட்டவிரோதமானது என்று கடந்த ஜூலை மாதம் அறிவித்தது. "அனைத்து புதிய குடியேற்ற நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும்" என்றும் அந்த நீதிமன்றம் கூறியது. இராணுவத்தை பயன்படுத்தி ஒரு நாட்டை ஆக்கிரமிப்பது ஐநா கொள்கைகளுக்கு எதிரானது என்றும் சுட்டிக் காட்டியது. ஆனால் இஸ்ரேல் அதை மதிக்க வில்லை. இவ்வளவுக்குப் பின்னரும், ஐ.நா பொதுச்சபை தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காமல் தனக்கான பொறுப்பில் இருந்து நழுவியுள்ளது.

பலஸ்தீனத்தில் "இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு விரைவில் முடிவுக்கு வர வேண்டும். பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும்" என்ற ஒரு தெளிவான செய்தியை ஐ.நா தீர்மானம் எடுத்துரைத்துள்ளது. இதை இந்தியா ஆதரிக்காமல் புறக்கணித்திருப்பது வரலாற்று பிழையாகும்.

**நன்றி: தீக்கதிர்**

**முன்பக்கத்தொடர்ச்சி…**

கொண்டால், அவரது தேர்தல் வெற்றிக்கு இந்தப் பிரச்சினையே கைகொடுத்து உதவியது என்பதைக் காண முடியும்.

இதுவரை காலமும் இலங்கையை ஆட்சி செய்த கட்சிகளின் தவறான கொள்கைகளும், கையாலாகாத்தனமுமே, அந்தப் பாரம்பரிய கட்சிகளை தோற்கடிப்பதற்கு மக்களை உந்தித் தள்ளியது எனலாம். அந்தப் பிரச்சினையின் தாக்கம் காரணமாகவே, 2022இல் 'அரகலய' என்ற பெயரில் மக்களைக் கிளர்ச்சிக்குத் தூண்டியது. அந்தக் கிளர்ச்சி காரணமாகவே, அப்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும், அவரது அரசாங்கமும் பதவி துறக்க வேண்டி ஏற்பட்டது. அந்தக் கிளர்ச்சியின் பின்னால் இருந்த பல்வேறு சக்திகளின் கரங்களில் ஜே.வி.பியின் கரங்களும் அடங்கும். அதன் காரணமாகத்தான் மக்கள் இம்முறை ஜே.வி.பின் கைகளில் ஆட்சி அதிகாரத்தை கையளித்திருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் ஜே.வி.பி. கட்சியினதும் நாட்டினதும் தலைவராக இருக்கும் அனுர குமார திசாநாயக்க நாட்டு மக்களின் பொருளாதாரப் பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறார் என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும்.

2019 தேர்தலில் வெற்றி பெற்ற கோத்தபாய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் பதவி விலகிய பின்னர் பதவிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடினார். அவர் ஜனாதிபதி தேர்தலில் தோற்றுவிட்டதால், அந்த உதவி நடு வழியில் நிற்கின்றது. அந்த அமைப்பின் உதவி இன்னமும் முழுமையாக வழங்கி முடியாத நிலையும், அந்தக் கடனை திருப்பிச் செலுத்த ஆரம்பிக்காத நிலையும் இருக்கின்றது. நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை திசாநாயக்க எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதை இன்னமும் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

தம்மை இடதுசாரிகள் என்று சொல்லிக்கொள்ளும் ஜே.வி.பியினர்,

முன்னைய காலங்களில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் வழங்கும் உதவிகளை கடுமையாக விமர்சித்தும் நிராகரித்தும் வந்துள்ளனர். ஆனால் சமீப காலமாக நாணய நிதியத்தின் உதவியை சில நிபந்தனைகளுடன் அல்லது திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளுவோம் எனக் கூறத் தொடங்கியிருந்தனர். எனவே, அவர்களும் இந்த விடயத்தில் முன்னைய அரசுகளின் வழித்தடத்தில்தான் செல்லப் போகின்றனரென எண்ண முடிகிறது.

தமது அரசின் கீழ் பொருளாதாரம் எப்படி கட்டி எழுப்பப்பட்டு, நாட்டு மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை ஜே.வி.பி. கட்சி இதுவரை தெளிவாக முன் வைக்கவில்லை. வழமையாக இடதுசாரிகள் முன் வைக்கும் "சுயாதாரப் பொருளாதாரம்" பற்றிக்கூட ஜே.வி.பியினர் வாய் திறக்கவில்லை.

ஆனால், ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாக, நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகையை ஆண்டுக்கு 4 மில்லியனாக தமது அரசு அதிகரிக்கும் எனக் கூறி வந்தனர்.

ஆனால் அது மட்டும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கப் போதுமா? என்ற கேள்வி ஒருபுறமிருக்க, எவ்வாறு தொகையை அதிகரிக்கப் போகின்றனர் என்ற கேள்வியும் இருக்கின்றது. சுற்றுலாப் பயணிகள் இரசிக்க விரும்பும் இலங்கையின் இயற்கை அழகை ஜே.வி.பி. அரசாங்கம் செயற்கையாக அதிகரிக்க முடியுமா? அல்லது இலங்கையில் விபச்சாரத்தை சட்டபூர்வமாக்கி, அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வரவை அதிகரிக்கப் போகிறார்களா?

இது ஒருபுறமிருக்க, இலங்கையின் விவசாயத்தையும் கைத்தொழிலையும் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, சுற்றுலாத்துறையில் பொருளாதார வருவாய்க்கிற்காக பிரதானமாகத் தங்கி நின்றால் கோத்தபாய ஆட்சிக் காலத்தில் எதிர்பாராது ஏற்பட்ட கொரோனா போன்ற பெரும் நோய்த் தொற்று ஏற்பட்டு, இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டால், அப்பொழுது ஜே.வி.பி. அரசின் மாற்றுத் தீர்வு என்ன? பொருளாதாரப் பிரச்சினை ஒருபுறமிருக்க, இலங்கையின் இன்னொரு முக்கிய பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு ஜே.வி.பி. அரசின் தீர்வு என்ன? ஜே.வி.பியைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சினை பற்றி அவர்களிடம் கேள்வி எழுப்ப வேண்டிய ஒரு முக்கியமான பிரச்சினையாகும்.

அதற்குக் காரணம் அவர்களது கடந்தகால வரலாறாகும். அவர்களது தலைவர் ரோகண விஜேவீர தமது இயக்கத்தை 1965ஆம் ஆண்டில் முதன்முதலாக ஆரம்பித்த போதே, "மலையகத் தமிழ் மக்கள் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கையாட்கள்" என்ற இனவாதப் பிரச்சாரத்தை ஆரம்பித்தார். அவர்கள் தமது இயக்கத்தை வளர்ப்பதற்காக ஆரம்ப காலங்களில் வைத்த 5 வகுப்புகளில் ஒன்றாக அந்தக் கருத்தை தமது புதிய உறுப்பினர்களுக்குப் போதித்தார்கள். அண்மையில் இந்திய அரசு அவர்களைக் கூப்பிட்டு மிரட்டலும் போதனையும் செய்யும் வரை அவர்கள் இந்திய எதிர்ப்பு வாதத்தையே தமது கொள்கையாக வைத்திருந்தார்கள்.

அது மட்டுமல்ல, இலங்கையில் வாழும் (குறிப்பாக வடக்கு கிழக்கில்) தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதவியில் இருந்த முன்னைய அரசாங்கங்கள் எடுத்த அத்தனை நடவடிக்கைகளையும் ஜே.வி.பியினர் எதிர்த்தே வந்துள்ளனர். இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்திய அரசின் உதவியுடன் 1987இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசு 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வந்த போது, அதை நடைமுறைப்படுத்த விடாமல் தடுப்பதற்காகவே 1988–89 காலகட்டத்தில் இரண்டாவது தடவையாக வன்முறை நடவடிக்கைகளில் இறங்கினார்கள்.

இப்பொழுது, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவும், இந்தியாவின் உதவியைப் பெறுவதற்காகவும், 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்வதாக ஜே.வி.பி. சொல்லிக்கொண்ட போதும், அதனுடன் சேர்த்து 'மாகாண சபை முறை தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு அல்ல' என்பதையும் சொல்கிறார்கள். அதே நேரத்தில் இனப் பிரச்சினைக்கு தாம் முன் வைக்கும் தீர்வு என்ன என்பதை அவர்கள் இன்றுவரை முன்வைக்கவும் இல்லை.

ஜே.வி.பி தலைவர் அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகி சில நாட்களே ஆகின்ற நிலைமையில் அவசரப்பட்டு அவர்களது அரசு பற்றிய மதிப்பீட்டை முன்வைப்பது சரியானது அல்ல. பாராளுமன்றத் தேர்தலும் நடந்து, அதிலும் அவர்கள் வெற்றி பெற்று, முழுமையான ஜே.வி.பி. அரசாங்கம் ஒன்று அமைந்து, அந்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளை ஒரு வருடமாவது அவதானித்த பின்னரே, அவர்களது ஆட்சி பற்றிய மதிப்பீட்டை வெளியிட முடியும்.

எது எப்படியிருந்தாலும், நாம் எல்லோரும் இறைமையுள்ள இலங்கை நாட்டின் புதல்வர்கள் என்ற வகையில், புதிய ஜனாதிபதிக்கு எமது வாழ்த்துக்களையும், தேர்தலை ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் நடத்தி முடித்த முன்னைய அரசுக்குப் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பாலைவனத்தில் மூன்று விமானங்கள் வெடிவைத்து தகர்க்கப்படுவதைக் காட்டினார்கள்.

நான் உடனடியாக பாடசாலை வகுப்புகளுக்கு சமூகமளிக்க வேண்டியதில்லை என்பது எனக்கு ஒரு நேர்மப்புள்ளி (plus point) ஆக – நீங்கள் அவ்வாறு அதனை அழைக்க முடிந்தால் – அமைந்தது. பாடசாலைத் தவணையின் தொடக்கத்தில் தலைமை ஆசிரியர், தங்கள் சக மாணவர்களில் ஒருவர் கடத்தப்பட்டு விமானத்தில் இருப்பதாகவும், ஒரு வாரம் தாமதமாகவே வகுப்புக்கு வருவார் என்றும் கூட்டத்தில் அறிவித்திருந்தார். எனவே நான் வடக்கு இலண்டனில் உள்ள ஹைகேட் பாடசாலையில் (Highgate school) ஒரு வாரம் தாமதமாகவே நுழைந்தேன். அது ஒரு வரவேற்கப்பட வேண்டிய ஓய்வாக அமைந்தது. இல்லையெனில் நான் உடனடியாக பாடசாலைக்குள் செல்ல வேண்டியிருந்திருக்கும்.

என்ன நடந்தது என்பதை ஒவ்வொருவரும் அறிய விரும்பியதால், நான் ஒரு வகையான பிரபலமாக மாறுவதற்கும் இது உதவியது. இதனால் என்னால் பல நண்பர்களை சம்பாதிக்க முடிந்தது.

அந்த மூன்றிலிருந்து நான்கு நாட்களின் மன அழுத்தத்தை நேற்று நடந்தது போல இன்றும் என்னால் தெளிவாக நினைவுகூர முடிகின்றது.

(சேர்ளி கந்தப்பா (Shirley Candappa) எழுதிய இப்பத்தி 'டெயிலி மிரர்' பத்திரிகையில் வெளிவந்தது)

**தமிழில்: வானவில்**

# அணு ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்யா தயங்காது



**தொ**லைதூர ஏவுகணைகளைப் பயன்படுத்தி ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனை அனுமதித்தால் அது ரஷ்யாவுடன் மேற்கத்திய நாடுகள் நேரடியாகப் போரிடுவதற்குச் சமமாகும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் போரின் தன்மை மாறிவிடும் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

மேற்கத்திய நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட ஏவுகணைகளை ரஷ்யாவுக்கு எதிராகப் பயன்படுத்த அனுமதி வழங்கும்படி கூட்டணி நாடுகளிடம் உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமியர் செலென்ஸ்கி கடந்த பல மாதங்களாக மன்றாடி வருகிறார்.

மேற்கத்திய நாடுகள் அனுப்பிவைத்துள்ள ஏவுகணைகளை இயக்கும் ஆற்றல் உக்ரைனுக்கு இல்லை என்றும் நேட்டோ உதவி செய்தால் மட்டுமே உக்ரைனால் அவற்றைப் பயன்படுத்த முடியும் என்றும் புட்டின் கூறினார். ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகளின் ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரைனுக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் உதவினால் அதற்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று புட்டின் தெரிவித்தார்.

மேற்குறித்த எச்சரிக்கை விடுத்தபோது எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று புட்டின் தெரிவிக்கவில்லை. ஆனால் இப்போது, உக்ரைனைப் பயன்படுத்தி ரஷ்யா மீது தீவிர தாக்குதல் நடத்தப்படுமானால், அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யா தயங்காது என்று அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு விளாடிமிர் புட்டின் தெளிவாக அறிவித்துள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் இரண்டரை ஆண்டுகளைக் கடந்து நடந்து வருகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்நிலையில், நீண்டதூர ஏவுகணைத் தாக்குதல்களை ரஷ்யாவுக்கு எதிராக தொடுக்க உக்ரைனுக்கு அனுமதி வழங்கலாமா என்பது குறித்து அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் ஆலோசனைகள் நடந்ததாகக் கூறப்படுகிறது. அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஏராளமான ஏவுகணைகள் உக்ரைனுக்கு வழங்கப்பட்டிருப்பதை இது உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இதற்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் பதில் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எச்சரிக்கையில், 'அணு ஆயுதமற்ற ஒரு நாடு (உக்ரைன்), அணு ஆயுத நாடுகளோடு சேர்ந்து ரஷ்யாவுக்கு எதிராக தீவிர ஆக்கிரமிப்பு முயற்சிகளை மேற்கொள்ளுமானால், இதனை ரஷ்யாவுக்கு எதிரான அணு ஆயுத நாடுகளின் தாக்குதலாகவே ரஷ்யா கருதும். அத்தகைய ஒரு சூழல் ஏற்படுமானால், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் ரஷ்யா பின்பற்றி வரும் கொள்கை மாற்றத்துக்கு உள்ளாகும். இதில் எந்த சந்தேகமும் இல்லை' என தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் உக்ரைன் மட்டுமல்லாது, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் புட்டின் அணு ஆயுத எச்சரிக்கை விடுத்துள்ளார். ரஷ்யா அணு ஆயுத தாக்குதல் நடத்துமானால், அதற்கு உத்தரவு பிறப்பிக்கும் தலைமை இடத்தில் விளாடிமிர் புட்டின் இருக்கிறார். அவர் உத்தரவிட்டால் ரஷ்ய இராணுவம் அணு ஆயுத தாக்குதல்களை நடத்தும். இந்நிலையில், உலகின் மிகப் பெரிய அணு ஆயுத நாடுகளில் ஒன்றான ரஷ்யாவின் இந்த அறிவிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

ரஷ்யாவின் அணு ஆயுதக் கொள்கையை கடந்த 2020 ஆம் ஆண்டு விளாடிமிர் புட்டின் மாற்றி அமைத்தார். எதிரியால் அணுசக்தி தாக்குதல் நடத்தப்பட்டாலோ அல்லது அரசின் இருப்பை அச்சுறுத்தும் தீவிர தாக்குதல்கள் நடத்தப்பட்டாலோ ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என்று அது கூறுகின்றது. கடந்த ஜூன் மாதம், அமெரிக்காவையும் அதன் ஐரோப்பிய நட்பு நாடுகளையும் எட்டக்கூடிய ஏவுகணைகளைத் தயார்நிலையில் வைப்பது குறித்து அவர் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகிலேயே அதிகளவு அணு ஆயுதங்களை கொண்ட நாடாக ரஷ்யா உள்ளது. நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா, பிரான்ஸ் பிரித்தானியா போன்ற நாடுகளிலும் அணுவாயுதங்கள் உள்ளன. எனினும் உலகின் 14,000 அணு ஆயுதங்களில் 50% வீதத்திற்கும் மேலானவை ரஷ்யாவிடம் உள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஏழாயிரத்திற்கு மேற்பட்ட அணு ஆயுதங்கள் என்பது ஓர் அபாயகரமான எண்ணிக்கையாகும்.